
# சங்கமம்
## 2010



மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
தமிழ் மாணவர்கள்

*With Best Compliments From*

# கஜமுகன்

# காட்வெயர்

**கட்டிடப் பொருட்கள், மிற்சுஜி சிமேந்து, பெயின்ற் வகைகள், கல்ரெக்ஸ் ஒயில் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்**

## கஜமுகன்

## காட்வெயர்

**இல. 147, 179, ஸ்ரான்லி வீதி,**

**யாழ்ப்பாணம்**

**தொ.பேசி : 0212222833**

Jude

# சங்கமம்


## 24 ஆடி 2010

வெளியீடு

இளநிலை
விஞ்ஞானப்பட்டதாரி மாணவர்கள்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



# ஆசியுரை

சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்படி மனிதனின் உள்ளார்ந்த ஞானத்தினை வெளிக்கொணர்வதே கல்வி. இதனை வெளிக்காட்டும் வகையில் மொறட்டுவைப் பல்கலைக்கழக இளநிலை தமிழ் விஞ்ஞான பட்டதாரி மாணவர்களால் "சங்கமம்" எனும் சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தலைமுறை தலைமுறையாக மொழியானது ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு பகிரப்படுவதுடன் ஆற்றல்கள், அறிவுத் திறன்கள், புலமைகள் என்பன கடத்தப்படும் ஊடகமாக இருந்து வருகிறது. பழமை வாய்ந்த எமது தமிழ் மொழியானது இன்று உருக்குலைந்து அதன் வடிவம் மாறி வேறு உரு எடுத்து விடுமோ என்ற பலரின் ஐயப்பாடுகளுக்கு மத்தியில், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த தமிழ் மொழி பேசும் மாணவர்கள் தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக அதனை வளப்படுத்த இந்த நூலை வருடாவருடம் வெளியிடும் முயற்சி பாராட்டுக்குரியது.

அந்த வகையில் இம் மாணவர்களின் தமிழ் உணர்வு, ஆற்றல்கள், திறன்கள் என்பன பல்வேறு ஆக்கங்களாக வெளிக் கொணரப்பட்டு அடுத்த மாணவர் சமூகத்திடம் ஒப்படைக்கும் வகையிலும் அவர்களை வழிநடத்தும் வகையிலும் சஞ்சிகையாக வெளிவந்துள்ளது. பல்வேறுபட்ட சமூகத்தவர்கள் பயிலும் பல்கலைக்கழகத்தில் நாளைய சமூக உருவாக்கத்திற்கும், தமக்கே உரிய பண்பாடு விருத்திக்கும் இம் மாணவர்களால் தொடர்ந்தும் இப்பணி தொடரப்பட வேண்டும் என நல்லாசி கூறி இதில் ஈடுபட்ட மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

சிவாகம கிரியாதத்துவ நிதி

வேதாகம கிரியா கலாபணி

*– பிரம்ம ஸ்ரீ ச. மு. பாஸ்கர ரவிக்குருக்கள் –*

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆ

பிரதம குரு

யாழ்ப்பாணம்



# ஆசிரியர் இதயத்திலிருந்து

வருடா வருடம் மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் விஞ்ஞான பட்டதாரி மாணவர்களால் நடாத்தப்படும் நிகழ்வு சங்கமம். திட்டமிட்டபடி 2009ல் நடாத்தப்பட்டிருக்க வேண்டிய இந்நிகழ்வு, அக்கால கட்டத்தில் இருந்த குழப்பமான நிலைமை காரணமாகவும், பின்னர் தொடர்ச்சியாக கனிஷ்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நீண்டகால விடுமுறை மற்றும் எமது மட்ட மாணவர்களிற்கு இருந்த இறுதியாண்டு செயற்திட்ட வேலைப்பளுக்களாலும், அனைத்து மாணவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான நாளை தேர்ந்தெடுக்க முடியாமையாலும் தாமதமானது.

இவ்வளவு காலமும் பொறுமை காத்த நல்ல உள்ளங்களுக்கு மிகவும் நன்றிகள், 2009ல் நிலவிய மிகவும் இறுக்கமான சூழ்நிலையின் மத்தியிலும் உத்வேகமாக செயற்பட்ட எமது மாணவர்களின் உதவியால் இச்சஞ்சிகை வெளியிடுவதற்குரிய நிதி விளம்பரங்கள் மூலம் திரட்டப்பட்டது. ஏறத்தாழ ஒருவருடமாக தமது விளம்பரமோ, புத்தகமோ வெளிவரவில்லை என திட்டி தீர்த்தபடியே பொறுமை காத்திருந்த விளம்பரதாரர்களே புத்தகம் உங்கள் வீடு தேடி வந்து கொண்டிருக்கிறது! அதோ கதவு தட்டப்படுகிறது. பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் பிரதியை.

கட்டுங்கடங்காத இளங்காளைகள் நாம் ஒன்று சேர்ந்து, முடிந்தவாறு எம் உழைப்பை ஒன்றிணைத்துள்ளோம் நூலாக இதில். சிசுவாக இருந்து தவழ ஆரம்பிக்கும் குழந்தை முட்டியில் வலி உணர்வத இயல்பு. நாங்களும் அவ்வாறு தான். பிழைகள் பல இருக்கலாம். மன்னித்துவிடுங்கள். நன்றாக இருந்தால் தொடர்ந்து ஆதரவை தாருங்கள்.

நாங்கள் வெறும் புத்தக பூச்சிகள் இல்லை. வேறு கலை ஆற்றல்களும் எங்களிடையே இருக்கின்ற சகலகாலவல்லவர்கள் என்பதை இச்சஞ்சிகையும் இந்நிகழ்வும் பறை சாற்றட்டும்.

தமிழ் எங்கள் உயிரிலும் உணர்விலும்.....

– *கார்த்தி* –



# Engineering Tamil Students (2005 / 2006)



இடமிருந்து வலம்

1ம் வரிசை : மயூரன், கலாரூபன், வசந், பிரவீணா, இளவஞ்சி, சுவர்ணா, மனுவித்யா, பிரதீபன், சஜீவ், டிலோநீதன், தாசன்

2ம் வரிசை : வள்ளுவன், கங்காதீபன், நந்தரூபன், நடராஜசர்மா, அனோஜன், கோபிகிருஷ்ணா, பிரேம்குமார், நிராதன்.

3ம் வரிசை : நோபேட், சபேசன், பகீரதன், கேசவன், சுகிர்தன், கிருஷாந்த, யதீசன், விபுலன், கார்த்திகன், லவசாந், சுகீசன், சிறீஜெயந்தன்.

4ம் வரிசை : மதன்ராஜ், செந்தில், பாவேந்தன், திருப்பரன், முகுந்தன், அமலன், சுதர்சன், நிமலன், ரம்மியதர்ஷன், ரகுரட்ணம், கோகுலக்குமரன், சஞ்ஜே, துஷ்யந்தன், திலீபன்

## Quantity Surveying Tamil Students(2005/2006)




## Facility Management Tamil Students (2005/2006)



## Information Technology Tamil Students(2005/2006)



## Town & Country Planning Tamil Students (2006/2007)



# அட்டைப்படக் கவிதை

பல்லூற்று நதிகள் பலகிளை கொண்டங்கே
கடலிலே சங்கமிக்க
கணிதவூற்றில் பிரிந்த கிளைகளிங்கே
பல்கலையிலே சங்கமிக்க
இரைதேடி வந்த கொக்குகள் நாமிங்கே
எப்பிரிவுமின்றி சங்கமித்தோம்


சங்கமித்து சோடியாய் பறந்தன பலகொக்குகள்
சோடியாய் வந்து சோடியையும் மாற்றின சில கொக்குகள்
இரைதேடிக் கொடுத்ததும் சோடியாகின இன்னும் சில கொக்குகள்
உயிர் கொடுத்த கொக்குகளும் பல
வயிறெரிந்த கொக்குகளும் பல
அழகுக்கொக்கின் வரவிற்காய் ஒரு காலில் நிற்கும் கொக்குகளும் சில

வதைக்கும் கொக்குகள் எக்கச்சக்கம்
வதையின் வகையும் எக்கச்சக்கம்
காமடிக் கொக்குக்கும் அளவில்லை
குசும்புக் கொக்குக்கும் குறைவில்லை

இரைதேடிய ஆண்டுகள் ஈரிரண்டே ஆனாலும்
இருக்கும்வரை மறக்கோம் இச்சங்கமத்தை

– ம. கலாரூபன் –
மட்டம் - 4
பொறியியல் பீடம்





*With Best Compliments From*

# G.T.V. ENTERPRISES (PVT) LTD

Importers Exporters,
Food Producers Forwarding
& Clearing Agents
Cargo Services to all Countries
by Air & Sea,
Courier Service,
Sri Lankan Airlines Cargo Agent

# VIJEYA ENTERPRISES

# MAHARAJA FOOD PRODUCTS

*No. 18/3, Dr. E.A. Cooray mawatha,*
*Colombo - 06*
*Tel : 0112360926, 0112559849,*
*Fax : 0112361139*
*E-mail : info@maharajafoodproduct.com*
*gtvcourier@yahoo.com*





# மெல்லத் தமிழ் இனி...

தமிழ் மொழி. தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுவுநிலைமை, தாய்மைப் பண்பு, பண்பாட்டுக்கலை அறிவு மற்றும் பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமில்லாத் தன்மை, இலக்கியவளம், உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை, மொழிக்கோட்பாடு என்ற பதினொரு பண்புகளையும் தன்னகத்தே உள்ளடக்கிய செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வந்த இலக்கிய நூலான தொல்காப்பியத்தையும், அதன் பின்னர் வந்து தமிழர்களின் வீரம், அறம், காதல் பேசிச்சென்ற ஐம்பெருங்காப்பியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு உள்ளிட்ட சங்க இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டு, வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்கு கலைவளமும், கவித்துவ எழிலும் கொண்ட ஒரு மொழியாக விளங்கிவருகிறது.

இப்படியாக தமிழ்மொழியைப் பற்றி எழுதுவதற்காய் இருந்தால் பக்கம்பக்கமாக பழம்பெருமைகளை மட்டுமே பேசமுடிகிறதேயன்றி, அண்மைக்கால மொழி, இலக்கிய வளர்ச்சிகள் என்று நோக்கப்போனால் முழுங்கைதான் மிஞ்சுகிறது. காலத்தோடு வளர்ச்சியடையாத, மற்றும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத எந்த ஒருவிடயத்தின் இருப்பும் கேள்விக்குறிதான். இதற்கு மொழிகூட விதிவிலக்காக இருக்கப்போவதில்லை என்பது உலகில் வேகமாக வழக்கொழிந்துவரும் மொழிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

இன்று உலகெங்கும் பரந்துவாழும் ஒரு சமுதாயமாக எங்கள் தமிழ்ச் சமுதாயம் இருக்கிறது. தமிழர்களுக்கென ஒரு நாடு இல்லாவிட்டாலும், யுத்தத்தின் காரணமாகவும், வேலை, வியாபாரம் போன்ற இன்னபிற காரணங்களுக்காகவும் வேறு நாடுகளில் குடியேறி, மேலைநாட்டு முக்கிய மொழிகளான ஆங்கிலம், பிரன்சு, டொச்மொழி, டனிஸ், ஸ்பனிஸ் என எத்தனையோ மொழிகளில் கல்வியைத் தொடர்ந்துகொண்டிருப்போர், ஏன் அந்த மொழிகளிலேயே தமது உயர்கல்வியை முடித்து வெளியேறிய எத்தனையோ எம்மவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலருக்கு இன்னும் தமிழில் நன்றாகப் பேசவும் தெரிந்திருக்கிறது என்பதே எம்மொழிக்கு ஒரு கொடை.

என்னைப் பொறுத்தவரை அடுத்தவரில் இருக்கும் நல்ல விடயங்களை நாங்கள் அப்படியே எடுத்துக்கொள்வதில் எந்தவிதத்தவறுமே இல்லை. எப்படி யூதர்கள் தமக்கென ஒரு நிலம் இல்லாமல் உலகெங்கும் பரந்து வாழ்ந்து, பிறமொழியிலுள்ள விடயங்கள் பலவற்றையும் அறிந்து, அவற்றை தமது இனத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார்களோ, அதேபோல அவற்றைச் செய்யக் கூடிய நிலையில் இப்போது இருக்கும் எமது சமுதாயம் ஏன் அவற்றை முயலக்கூடாது?

எந்த ஒரு விடயத்தையும் தாய்மொழியில் படிப்பதும், அதை அடுத்தவர்களுடன் தும் எப்போதும் மகிழ்ச்சியான விடயம்தானே? எமக்குத் தேவையான எத்தனை ங்கள் பிற மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றை எமது கலாச்

உடைக்கப்பட்டுவிடாமல் மொழிபெயர்ப்போம். பலதையும் தெரிந்தெடுத்துப் படிப்போம் எம்மைச்சுற்றி நாமே போட்டுக்கொண்டிருக்கும் வட்டத்தை உடைப்போம். எம் அறிவை வளர்ப்போம். அடுத்தவருடன் அதைப் பகிர்ந்து மொழியையும் வளர்ப்போம். மெல்ல தமிழ் இனிப்பா(க)யட்டும்!


– பா. சுபாங்கன் –
மட்டம் 3
பொறியியல் பீடம்

*With Best Compliments From*



Thirunavukkarasu Senthan
B.Sc. Eng, AMIE (SL), SCP (Java)
Chief Executive Officer

**Jayantha Computer Park**




75/22, Thumpalai Sivan Kovilady,
Point Pedro.

Mobile : 077 7482339
E-mail : tsenthan@yahoo.com

*With Best Compliments From*

**CUMARESH TRADERS**



16, Bus Stand,
Point Pedro
T.P : 021 2263171



# பட்டச்சிறையினிலே....

புத்தகம் கையுமாய் புலம்பிய நாட்கள்
சித்தம் கொண்டு சிதைந்து போனதாய்
நித்தம் சொல்லி நிமிர்ந்து நடந்தோம்
பள்ளி வாசலில் துள்ளிய எமக்கு
பல்கலை என்னும் படலை திறந்தால்
சிறைகள் உடைத்த சிந்தனை கொண்டு
சிட்டுக்குருவியாய் சீறிவந்தோம்....

வந்த இடத்தில் வரையறை செய்தது
செப்பிட முடியா செயல்வழி மொழிகள்
ஆங்கிலம் என்னும் அந்நிய மொழியோ
அவஸ்தையானதை யாரிடம் சொல்லிட
பாளி மொழியின் பலமான நோண்டிகள்
பாதை எங்கும் பாரமாயப் போனது.....

பொலவின் காசுக்கு போனமாதக் கதைபேசி
கன்ரீன் கடையில். கணக்காக சாப்பிட்டு
மிச்சக் காசுக்கு மிஸ்கோல்கள் விட்டு
முப்பது வயசு வரை மோகம் தான் மிஸ்ஸாச்சு!
கண்களில் விழுந்த கன்னியர் கூடி
கணக்குகளின்றி கதையுடன் சென்றிட
செமிஸ்ரார் நினைப்பால். சிக்சர் அடிக்க
செயலற்றுப் போனது செல்கள் எல்லாம்

பஸ்சில் ஏறிப் பாதைகள் பார்க்க
பத்து இடங்களிலும் பலமுறை செக்கிங்
சுத்திப் பார்க்க சுதந்திரம் இன்றி
அத்தனை பேரும் அமைதிகளானோர்
இத்தனை துன்பம் சுதந்திரம் என்றா
தூக்கம் எல்லாம் துக்கமாய் அகற்றி
அத்தனை இன்பமும் அழித்துவிட்டோம்
பல்கலை என்னும் பட்டச்சிறையில்...

கண்டம் ஒன்றைக் கண்ட களிப்பில்
வந்த வழியை மறந்த மாலுமியாய்
பட்டம் முடித்துப் பாதைகள் தெரியா
பாவியாய்ப் போனது பல்கலை வாழ்வு

*– பா. கங்காதீபன் –*
மட்டம் - 4
பொறியியல் பீடம்

*With Best Compliments From*

**IYENGARA KALANCIYAM**

**ஐங்கரா களஞ்சியம்**

Main Street Point Pedro

Dealers in Harware, Electrical Goods & Paints etc...

*With Best Compliments From*

**அபிசன் எரிபொருள் நிரப்பு நிலையம்**

கந்த முருகேசனார், சிலையடி
மந்தகை புலோலி

T.P : 0777173201

*With Best Compliments From*

**திறம் நல்லெண்ணெய்**

*தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்*

*மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை*

**BEST GINGELLY OIL**

# கானல் நீர் கனவுகள்

இருளின் சுவடுகளில் விட்டில் பூச்சி தேடும் தருணங்கள்
வன்னியில் வரிசையான மாற்றங்களில் சேர்க்கப்பட்ட மானங்கள்
நதியின் ஒய்யார வளைவுகளில் முளைவிடும் பாசிக்கள்
நடுநெற்றிப் பொட்டில் பண்பாட்டுடன், மொறட்டுவ கம்பஸ்ஸில் தமிழச்சிகள்
கிராம மண்வாசனையுடன் தமிழில் கௌதம்மேனன் மூவீஸ்
உச்சஸ்தாயி குத்துப்பாடற்ற விஜய அன்ரனி இசைஅல்பம்
மூஞ்சிப் புத்தகத்தில் மூக்கு நுழைக்காத இளவட்டுக்கள்
சோமபான மணமறியாத இறுதியாண்டு மாணவ பாலகர்கள்.

அமாவாசை நடுநிசியில் முழுநிலவை தொட்டுமுத்தமிடும் கரங்கள்
மாந்தர் தம் துயரில் மனம் பதைக்கும் அரசியல் தலைகள்
தமிழருக்காக வாழ்க்கைதனை அர்ப்பணித்து உயிர்விடும் ''கருணை செல்வம்''
சேமநல பணிகளில் வெறுமையாயிருக்கும் கையூட்ட பெட்டிகள்
மணவறை ஏறும் காலிமுகத்திடல் ஒரு குடைசோடிகள்
பன்னீரில் குளித்து இரணிய கட்டிலில் சேரிப்புற சிறுவர்கள்
கலர்கல்வீடுகளில் யுத்த அங்கிதமற்று எம் அகதிகள்
தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ நான் தேடிய நாடு.


– *கார்த்தி* –
மட்டம் - 4
பொறியியல் பீடம்


நாம் பிரிக்கப்படும் வரை நம்புவோம்
நாம் இணைவோம் என்று
- நந்தன்


*With Best Compliments From*



ஜெயகிருஷ்ண வரணியம்


Jeyakrishna Enterprises

Dealers in Electrical, Electronic, Hardware, Paints, Cycle Parts & Fittings

Main Street, Nelliyady, T.P : 077 3147579

*With Best Compliments From*

**PC POWER UNIT**



* PC ASSEMBLING.
* PC SERVICE & SOFTWARE INSTALLATION.
* COMPUTER NETWORKING.
* PC UPGRADING.
* PC TROUBLE SHOOTING.
* VIRUS PROTECTION.



கணனிகள் மற்றும் கணனிகளுக்குரிய உதிரிப்பாகங்கள்
அனைத்தும் ஒரே இடத்தில் நியாயவிலையில்
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள் ....

356B, Kasthuriyar Road, Jaffna
Phone : 0212228816 Fax : 0212228816
Hotline : 0775290521
Email : pcpowerunit@yahoo.com

*With Best Compliments From*

# கணித, உயிரியல் வகுப்புகள்

**THE SCIENCE CORNER**

**CLOCK TOWER LANE, JAFFNA**

# இது யார் செய்த குற்றம்......?

இலங்கையில மூன்று மொழிகளை பாவிச்சாலும் வடக்கு, கிழக்கை விட்டு வந்தா கட்டாயம் சிங்களம் தெரிஞ்சிருக்க வேணும். எனக்கு அப்பவே தெரியும் சிங்களம் தெரியாட்டி கொழும்பில தவில் அடிக்க வேண்டி வரும் எண்டு. அதால ஏதோ கொஞ்சமாவது யாழ்ப்பாணத்தில படிச்சிட்டு வந்தனான். ஆனா ஒரு வீதம் கூடி ஒழுங்காக் கதைக்கத் தெரியாது. அப்ப பட்ட பாடுகளை நினைச்சா இப்பவும் சிரிப்புத்தான் வரும்.

இப்படித்தான் ஒருநாள் பஸ்ஸில போய்க்கொண்டிருந்தனான். அப்ப பக்கத்தில் ஒரு கிழவன் வந்து இருந்திச்சு. பஸ் கெண்டக்ரரிட்ட காசு கொடுத்து ரிக்கற் வாங்கின கிழவன் திருப்பி அவன் கொடுத்த மிச்சக்காச எண்ணிப்பாத்திட்டு அவனிட்ட ஏதோ திருப்பிக் கேக்க கடைசியில வாக்குவாதத்தில முடிஞ்சுது. பத்தாததுக்கு கிழவன் அவனைப்பற்றி என்னட்ட சொல்லித் திட்டிக் கொண்டு வந்திச்சு. எனக்கு கிழவன் என்ன சொல்லுதெண்டு விளங்காட்டியும் ஏதோ திட்டிக்கொண்டு வருது எண்டு மட்டும் விளங்கிச்சு. நானும் விளங்கினமாதிரி தலையாட்டிக் கொண்டே வந்தன். கொஞ்ச நேரத்தில கிழவன் என்னையே தொடர்ந்து பாத்திச்சு. அப்பவும் நான் தலையாட்டிக்கொண்டே இருந்தன். பிறகுதான் விளங்கிச்சு கிழவன் ஏதோ கேள்வி கேட்டிட்டு பதிலுக்கு பாத்துக்கொண்டு இருக்குது எண்டு. என்ன கேட்டது எண்டு விளங்கினாத் தானேய்யா பதில சொல்லுறதுக்கு. நான் தமிழ் எண்டு சொல்லி சிங்களம் விளங்கேல எண்டு சொல்ல கிழவன்ர மூஞ்சி கறுத்திட்டுது.. கிழவனுக்கு நோண்டியாப்போட்டுது எண்டு எனக்குத் தெரியும். இனியும் இருந்தா சரியில்ல எண்டு நினைச்சுதோ இல்லாட்டி, இறங்கிற Halt வந்திச்சோ தெரியாது கிழவன் விறுவிறு எண்டு இறங்கிப்போட்டுது.

இப்பிடியும் 1st year இல ஒண்டு நடந்திச்சு. அப்ப JG Hall இல லெக்சர் நடந்து கொண்டிருந்திச்சு. வெளியில கதைச்சுக் கொண்டு போற பெடிபெட்டையளின்ர சவுண்டால lecturer குழம்பீட்டார். பின்னிக்கிருந்த ஒரு பெடியன கதவைச் சாத்தச் சொல்லி கையக்காட்டி சிங்களத்தில சொல்ல அவன் எழும்பி கதவச்சாத்தாம வெளியில போட்டான். ஒருத்தருக்கும் ஏனென்டு விளங்கேல. Lecturer திருப்பி அவனை கூப்பிட்டு கேக்கேக்கதான் விசயம் விளங்கிச்சு அவன் ஒரு தமிழ்பெடியன் எண்டு. அவன் நினைச்சான் தான்கதைச்சுக் கொண்டிருக்கிறத கண்டிட்டுத்தான் அவர் வெளியில போகச் சொல்லீட்டார் எண்டு. இப்படி ஆக்களுக்கு முன்னாலையும் நோண்டியாகியிருக்கிறம். ஆனால் அது சத்தியமா நான் இல்ல.

கம்பஸில் Practical செய்யேக்கயும் படாதபாடு பட்டிருக்கிறன். Practical செய்யிற Instructor மார் சிங்களத்தில விளங்கப்படுத்தி முடிச்சு விளங்குதா எண்டு கேட்டபிறகு, இல்ல விளங்கேல எண்டு English இல சொன்னா பிடிச்சிருவாங்கள் எண்டு பேசாம தலையாட்டிட்டு நிக்கிறநேரங்களில் சிங்கள friends இவர் தமிழ் எண்டு சொல்லேக்க ஒருக்கா தூக்கிவாரிப்போடும். எனக்கும் ஒரு குற்ற உணர்வு, அவங்களுக்கும் ஒரு குற்ற உணர்வு இது அடிக்கடி நடக்கிற ஒண்டு பழகிப்போச்சு பாருங்கோ. இத சுருக்கமா நோண்டி எண்டும் சொல்லுவினம்.

Lecturer மார் பாடம் சொல்லிக் கொடுக்கேக்க இடையில நித்திரைய குழப்பிறதுக்கு சிலநேரம் பகிடி விடுவினம். இது சிங்களத்தில சொல்லேக்கதான் சுவாரசியமா இருக்கும் எண்டதால சிங்களத்தில தான் சொல்லுவினம். சிங்களப் பெடியள் சிரிச்சு முடிச்ச பிறகுதான்

நாங்கள் சிரிப்பம். ஏனெண்டா பக்கத்தில இருக்கிற சிங்களப்பெடியனிட்ட விளக்கம் கேட்டெல்லே சிரிக்கவேணும். இல்லாட்டி பக்கத்தில இருக்கிறவன் எங்களை ஒரு மாதிரிப்பாப்பான். இவனுக்கு விசர் எண்டு. ஆனால் இங்கிலிஷ்ல பகிடிவிடேக்கயும் நம்மட பெடியள் விளங்காட்டியும் சிரிப்பாங்கள், நோண்டியில்லாம இருக்கட்டும் எண்டு. இதையும் மீறி நித்திர கொள்ளுறவனும் இருக்கிறான், பாவிப்பயல் குடுத்து வைச்சவன்.

ஆனாலும் நாங்கள் சிங்களம் கதைச்சுப்பழக வேணுமெண்டால் நாங்களாத்தான் இறங்க வேணும். அதாவது சொல்லுவாங்கள் தண்ணீக்க இறங்கினாத்தான் நீந்தப்பழகலாம் எண்டு. அப்பிடிப்பாத்தா நாங்களா சிங்களத்தில கதைக்க வெளிக்கிட்டு அவன் திருப்பிக் கதைக்க வெளிக்கிட்டானெண்டா எங்களுக்கு விளங்காது. பிறகென்ன வேதாளம் முருங்கைமரம் ஏறின கதைமாதிரி இங்கிலிஷில தொடங்க வேண்டியதுதான்.

கொழும்பில இருக்கிற தமிழரும் சிலபேர் தமிழாக்களோடையும் சிங்களத்தில தான் கதைச்சுக் கொண்டு திரிவினம். ஏனெண்டு கேட்டா Safety யாம். ஆனா கதைக்கிற சிங்களமோ ஆமிக்காரன் தமிழ் கதைச்சமாதிரித்தான் இருக்கும். இதால தமிழனோட கூடி சிங்களத்தில் கதைச்சுக்கொண்டு வந்த சந்தர்ப்பங்களும் இருக்கு பாருங்கோ கடைசியில தான் சொல்லுவான் தானும் தமிழன் எண்டு.

இப்படிப்படுகிற பாடுகள் பத்தாது எண்டு கிட்டடியில யாழ்ப்பாணம் போகேக்க friend ஒருத்தன் தேப்பனை கோயில்ல கண்டனான். மனிசன் கேட்டிச்சு ''தம்பி நாலு வருசம் கொழும்பில இருக்கிறீர் எப்படி சிங்களம் கதைப்பீரா?'' எண்டு. நானும் ஓமோம் ஓரளவு கதைச்சுச் சமாளிக்கத் தெரியும் எண்டு சொல்ல மனிசன் சொல்லிச்சு ''தம்பி என்ர மகனும் இப்பதான் கொழும்புக்குப் போனவர் ஆனா நல்லா சிங்களம் கதைப்பார்'' எண்டு ஆனா எனக்குத் தெரியும். அவனுக்கு எக்காய், தெக்காய், துனாயை தவிர வேறொண்டும் தெரியாதெண்டு. இப்பிடித்தான் சில தாய் தேப்பன்மார் சும்மா பெருமைக்கு புளுகிக்கொண்டு திரிவினம். இதுக்கு நல்ல உதாரணம் யாழ்ப்பாணத்தில் சில தாய், தேப்பனிட்ட ''மகள் என்ன செய்யிறா?'' எண்டு கேட்டா, சொல்லுவினம் ''மகள் வேம்படியில Medicine செய்யிறா எண்டு. அத கேக்கிறதுக்கு எதையும் தாங்கும் இதயம் வேணும் பாருங்கோ. இல்லாட்டி Heart attack வந்திடும்.

இதே Friend தான் கிட்டடியில கொட்டகெனா பஸ்ஸில போய்க்கொண்டிருந்தவன் இறங்கிற Halt வரேக்க முன்னுக்குப்போய் driver ஐ பார்த்து ''பயிண்ட ஓன'' எண்டு சொல்லுறதுக்குப் பதிலா ''பயினவாத'' எண்டு கேட்டுப்போட்டான். Driver விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிற்றான். நான் கேட்டதில தான் ஏதோ கோளாறு எண்டு அவனுக்கு விளங்கிட்டுது. திரும்பி அவன்ட முகத்த பாக்காமலேயே சத்தமில்லாம இறங்கீட்டான்.

இப்பிடி சிங்களம் தெரியாத தமிழன் படுகிற அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமில்ல. கொஞ்சக்காலத்துக்கு முதல் தமிழ்ப் பொடியள பொலிஸ்காரன் பிடிக்கேக்க, அவன வெளியில எடுக்கிறன் எண்டு அரைகுறைச் சிங்களம் தெரிஞ்ச பெடியள வீராப்பா போய் கதைச்சு வெளியில எடுத்தும் இருக்கிறாங்கள். ஆனா அவங்கள தூக்கி உள்ள போட்டுட்டான். உள்ளுக்கு இருந்தவன் வெளியில வந்திட்டான். சிலநேரம் இரண்டு பேரும் சேர்ந்து உள்ளுக்க இருந்த கதையளையும் நான் கேள்விப்பட்டிருக்கிறன்.

சரி இனிக்காணும் இதோட நிப்பாட்டிறன். எல்லாத்தையும் சொல்லப்போனா புத்தகம் முடிஞ்சிடும். ஆனா இப்பவும் ஒரு மாசம், இரண்டு மாசம் யாழ்ப்பாணத்தில நிண்டிட்டு திரும்பி கொழும்புக்கு வந்து சிங்களத்த கேக்கேக்க வெறுப்பா இருக்கும். இதால பட்ட நோண்டியளால தான் இப்படி இருக்கும் எண்டு நினைக்கிறன். இதப்பற்றியெல்லாம் வேற ஒரு சந்தர்ப்பம் வரேக்க சொல்லிறன் இல்லாட்டி facebook இல யாவது போடுறன். இப்ப வாறன்.

*– ம. கலாரூபன் –*
மட்டம் 4
பொறியியல் பீடம்


*With Best Compliments From*

**CHITHAMPARAPILAI BOOK DEPOT**



DEALEARS IN STATIONERY PRINTING PAPERS, SCHOOL BOOKS & ETC....



*With Best Compliments From*

சங்கமம் சிறப்புற ஆசிகூறும்

**பிரபல பௌதீகவியல் ஆசிரியர்**

**திரு. குமரன்**

*With Best Compliments From*

# Vysnavi Nagai Poonka

## Manufacture of Gold Jewels

**Main Street**
**Nelliady**
**Karaveddy**

*With Best Compliments From*

**சங்கமம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்**

# மணி ஜுவெல்லர்

**நவீன வேலைப்பாடுள்ள புதுப்புது டிசைன்களில் தங்க நகைகள் செய்துதருபவர்கள்**

**ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.**

| ஈசன் ஜுவெல்லறி | | மணி ஜுவெல்லர் | |
|---|---|---|---|
| கச்சாய் வீதி<br>சாவகச்சேரி | பிரதான வீதி<br>சங்கானை | கச்சாய் வீதி<br>சாவகச்சேரி | பிரதான வீதி<br>சங்கானை |

# என் பல்கலையில் ...

விசவத்தனையான் அருள் வேண்டி
அம்மா அண்ணா வழியனுப்ப
2006 May இல் அப்பாவுடன்
ஆரம்பித்த பயணமிது
uniக்கு unique ஆக வந்தநான்
முதல் நாளை பெரியப்பாவுடனும்
மறுநாள் சின்னண்ணாவிடம் Sabara சென்று
ஆசியும் பெற்றேன்

வரும் போது First class தான் என்று எண்ணி
வந்த எனக்கு first dayயே கிழிஞ்சு போச்சு
அடுத்த வந்த semi exam உடன்
மீதியும் கலைஞ்சு போச்சு
முதலிரு வருடம் second lane இல்
என் வாழ்க்கை ஆங்கில அகராதியுடனும்
Seniors command பண்ண
நிம்மி, அகில், அமலன் ஒன்றிணைய
அந்த நாள் அருமைகளை - யாராலும்
அசைக்கவும் முடியுமோ
பகிடிக்காய் பகிடிவதை செய்த - சிரேஷ்ட மாணவர்கள்
அன்பையும் அறுப்பையும் எம்முடன் பகிர்ந்து
அந்தியில் அன்னை வழியில் வந்த என்னை
அடுக்கடுக்காய் வதையன் என்றனர்

மீதி பல்கலை வாழ்வை Molpe mini Hostelல் அமைக்க
அத்தருணம் கொழும்பில் வெடியதிர
சிறுபான்மை நாமும் சிறகின்றி பரிதவிக்க
சினத்தோடு சிவிலியன்ஸ் நாமும்
சிதைந்தோம் வெள்ளவத்தை நோக்கி

அங்கு தான் Vibration, சுடுகுத்து, அலுப்பன்
புடைசூழ அழகாய் கிடைத்தது
அரண்மனை ஒன்று - அங்கேயும்
காண்டத்தோடு குண்டனும் cards அடிச்ச காலமிது
கொப்பேயும், sub வோடனும் Beach இல்
உடல்கழுவ அரசியல் அலசலுடன்
ஆய்வாளர் இக்பால் அக்தாஸை
இரணுவ தளபதியாய் மாற்றினேன்.

2009 ஏப்பிரலில் இருமாத விடுமுறைக்காய்
வீடு செல்ல எங்கட மக்களுக்கு - அப்பதான்

இடியும் எறிகணையும் இரைந்தது இடைவிடாது
சங்கமத்திற்காய் சங்கடத்துடனே
சலனமின்றி பணம் தேடி அலைய - நாமும்
நெல்லியடியில் நந்தனும் சாவகச்சேரியில் முகுவும்
சங்கானையில் நானும் யாழ் Town இல் எல்லாரும்
ஒருவாறாய் ஒரு லட்சம் வரை சேர்த்தோம்
அவ்வாறே திருமலையில் நிறாவும் ஹட்டனில் துவாவும்
குவித்த பணத்தினால் சங்கமமும் சங்கமிக்கிறது

யூனுக்கு இங்கு வர hostelu லும் கிடைத்ததால்
கூத்தும் கும்மாளத்திற்கும் குறைவேயில்லை
Pattu விலும், New இலுமாய் பன்னிரண்டு room இலே
கரடியும், மறியும், வண்டியுடன் பப்பாவும் - போதாதெண்டு
லௌகியும் , டிலோவும், நவஜீயும், பொத்தையுமாய்
போனது அந்தக் கனாக் காலம்
குளியாச் சிறுகரடியும் கூத்துக்கு பாக்குட்டியும் - Earth
சஜீவுடன், குழந்தை வடிவேலும் சேர்த்து
Tea மாஸ்ரரும், மயூராஞ்சியும் மக்கள் படையுடன் மருவினர்
பிறகென்ன பசங்களுக்கு Birth day என்றால்
கூழ்முட்டையும், நிறமாவும், Cream உம் கலந்தடிச்சம்

குடுக்காரன் குட்டிக்கதை சொல்ல
கும்பிட்டேன் என்று சொல்லி
Phone உம் பணமும் பொக்கிசமாய்
கொடுத்த நண்பன் எங்கே?

முல்லை திருமலைக்கிடையே
Express பஸ் ஓடுதென்றும்
ஆந்திரா பஸ்சில் யாருக்கு அதிக
ஆசன ஒதுக்கீடென்றும்
செப்பிய விடியலின் விவாதமும்
வன்னி Batti கிடையே சுரங்க புனைக்கதையும்
ஜப்பான் அணு குண்டு இலங்கையை தாக்கியதென்றும்
சொல்லிய அரிச்சந்திரர்கள் எங்கே?

காதலித்ததில்லை வலியுமில்லை கவிதையும் வரைந்ததில்லை
கூடி இருந்த நட்பின் வலியால் ஏதோ கிறுக்கிவிட்டேன்
வரிகளில் வைரமில்லை என வைதிடாதீர் - என்னை
வலிகள் கூடும் போது வரிகளும் தீயாகும் ஓர் நாள்.

– ச. தாசன் –
மட்டம் - 4
பொறியியல் பீடம்

# குருஷேத்திரம்

அன்று கிழக்குக்கரையில் தான் சூரியன் உதித்தான். ஆனாலும் வானம் இருண்டே கிடந்தது. வானத்தில் வட்டமிட்ட கழுகுகளும் எங்கோ ஊளையிட்ட ஓநாய்களும் ஏதேதோ கதைகளை சொல்லிச் சென்றன. குருஷேத்திரத்தில் பதின்மூன்றாம் நாள் போர் அது. பீஷ்மரின் வீழ்வுக்குப் பின்னர் துரியோதனன் திட்டப்படி துரோணர் சக்கர வியூகம் அமைத்துப் போரை நடத்திக் கொண்டிருந்தார். தர்மனை எப்படியும் அந்த சக்கர வியூகத்தினுள் மடக்கி சிறைப்பிடிப்பதே அந்த வியூகத்தினை துரியோதனன் அமைத்ததின் நோக்கம். ஆனால் அந்த வியூகத்தினை உடைக்கத் தெரிந்தவர்கள் பாண்டவர் தரப்பில் அருச்சுனன், கிருஷ்ணர் மற்று அபிமன்யு. ஆனால் அபிமன்யுவுக்கு சக்கர வியூகத்தினை உடைத்து உள்ளே போகத் தெரியுமே தவிர மீண்டு வெளியேவரத் தெரியாது. அத்தோடு அருச்சுனனும் கிருஷ்ணரும் அச்சமயம் யுத்த களத்தில் வேறிடத்தின் வேறு ஒரு மூலைக்கு துரியோதனனின் யுத்த தந்திரத்தால் திட்டமிட்டு நகர்த்தப்பட்டார்கள். எனவே அபிமன்யு வியூகத்தை உடைக்கப் புறப்பட்டான். அவன் ஏற்படுத்தும் உடைவினுள் நுழைந்து அவன் பின்னாலேயே பீமனும் மற்ற வீரர்களும் அவனுடனேயே உள்ளே சென்று தருமனை மீட்டுவருவது என்றுதான் தீர்மானிக்கப்படுகின்றது. அபிமன்யுவிற்கான களம் அந்த குருஷேத்திரத்தில் பதின்மூன்றாம் நாள் களம். அவனின் வீரம் அந்தக் களத்தில் நிரூபிக்கப்படுகின்றது. ஆனால் தருமன் வியூகத்தில் இருந்து மீட்கப்பட்டு வெளிவந்த சிலகணங்களில் அவர் உட்பட அபிமன்யுவைப் பின் தொடர்ந்த நான்கு பாண்டவர்களையும் ஜெயத்ரதன் முன்னேற விடாமல் தடுத்து விடுகிறான். உடைபட்ட வியூகத்தின் நடுவே அபிமன்யுவைத் தனியாக வளைத்து விடுகிறார்கள். அற்புதமான போர் ஒன்றை தனித்து நின்று நடாத்தினான் அபிமன்யு. அடுத்த சில கணங்களிலேயே துரியோதனன் படையில் பலநூறு வீரர்கள் மாண்டு போனார்கள். துரோணர் ஆச்சரியத்தில் கண்பிதுங்கிப் போகும் அளவுக்கு அத்தனை பேரையும் தனியாக சமாளித்தான் அந்த பதின்ம வயது இளவல். சுற்றிவளைத்து பின்னால் இருந்து நயவஞ்சகமாக அவனது வில்லின் நாணை அறுத்து விடுகின்றார்கள். பின்னர் அவனது வலதுகையை வெட்டி வீழ்திய போதும், தேர்ச் சில்லினை இடதுகையினால் சுழற்றிச் சுழற்றிப் போராடிய இறுதியில் வீழ்த்தப்படுகின்றான் அந்த இளவரசன்.

இற்றைக்கு கிட்டத்தட்ட 7570 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு. 5561 அக்டோபர் 28ல் வீழ்த்தப்பட்ட மாவீரன்தான் இந்த அபிமன்யு. மகாபாரதக் கதைகளில் வரும் அத்தனை கதைமாந்தர்களிலும் எல்லோர் மனதையும் எளிதில் பாதித்து எளிதில் இடம்பிடிக்கக்கூடிய பாத்திரம் அபிமன்யு. காலந்தான் எத்தனை ஏமாற்றங்களை மானிட வாழ்வினில் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றது. இந்த அபிமன்யுபோன்று எத்தனை இளம் மாந்தர்கள் இதுவரை கணக்குத் தெரியாமலும் எம் கண்ணுக்கும் தெரியாமலும் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் மரணமும் அதன் பின்னால் உள்ள அரசியல் நிகழ்வுகளும் எங்களின் கண்ணுக்குப் புலனாவதில்லை என்பதுதான் உண்மை. மரணத்திலும் கொடியது மறக்கடிக்கப்படுவது என்று யாரோ சொல்லியது உண்மை தான். அத்தகைய அபிமன்யுக்களை மனதில் சிலகணம் நிறுத்திக் கொண்டு மிகுதியையும் வாசியுங்கள்.

மகாபாரத காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் இன்று இந்த விஞ்ஞான வளர்ச்சி அடைந்த காலத்தில் கூட பயன்பாட்டில் இல்லை. துரோணரின் மரணத்திற்கு பழிவாங்க அஸ்வத்தாமன் பயன்படுத்திய ஆயுதம் அன்று கருக்களில் இருந்த அனைத்து சிசுக்களையுங் கூட அழித்ததாகச் சொல்லுகின்றது மகாபாரதம். உத்தரையின் கருவறையில் இருந்த

அபிமன்யுவின் மகனையும், குரு வம்சத்தின் வாரிசுமான பரிட்சித்துவையும் மட்டும் கிருஷ்ணன் காத்தருளியதாக தொடர்கின்றது. இந்த நிகழ்ச்சி எந்த அளவிற்கு உண்மை பொய் என்ற நிலைப்பாட்டையும் தாண்டி எங்களை யோசிக்கவைக்கக் கூடிய முக்கிய விடயம். இந்த ஆயுதத்தினை வெறும் கவிஞரின் கற்பனையாக மட்டும் எடுப்பதாயிருந்தால், எவ்வாறு அவர்களுக்கு அந்தக் கற்பனைக்கான வளம் கிடட்டியிருக்கும்? வெறும் அம்பும் வில்லும் மாத்திரம் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் என நாம் நம்பிக் கொண்டிருக்கும் அவர்களிடம் உடலுக்குள் இருக்கும் கருக்களைக் கூடத் தேடிச்சென்று அழிக்கக்கூடிய கதிர்வீச்சு ஆயுதங்கள் பற்றிய கற்பனை இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே வெறும் கற்பனையில் மாத்திரம் எழுதிய வரிகளாக இருக்க முடியாது. இவ்வாறான அல்லது அதற்கு சமமான ஆயுதங்கள், அல்லது கருவிகளின் பயன்பாடு அந்தக் காலத்தில் இருந்திருக்க வாய்ப்புண்டு. அதைவிடவும் மேலும் பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தினுள் நன்கு ஆழ ஊடுருவிக் தேடியவர்களுக்கு அவை என்னவென்று தெரியும். பீஷ்மரைக் கொல்லவென்று பெண்ணாகப் பிறந்து, ஆணாக மாறிய சிகண்டியின் வரலாற்றில் இருந்து மகாபாரதக் காலத்தில் பாலின மாற்றம் பற்றிய அறிவினை அவர்கள் பெற்றிருக்கக்கூடும் என்ற ஐயமும் வளர்கின்றது.

எல்லாவற்றையும் விட எந்த நட்சத்திரம் எந்த உடுத்தொகுதியைச் சேர்ந்தது, எந்தக் கோள் எந்த நட்சத்திரத்தைச் சுற்றுகிறது என்று இன்றே தெளிவாகக் கூற முடியாதுள்ள போது மிகவும் நுட்பமாகவும் தெளிவாகவும் அந்தப் புராண காலத்திலேயே, அதாவது சமூகவியல் சொல்லும் இரும்புக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே தெளிவாக அவற்றின் ஒழுக்குத் தொடக்கம் சுழற்சிக் காலம் வரை அனைத்தையும் கணிக்க எந்த ஆற்றலால் முடிந்தது? அந்த ஆற்றல் ஏன் இன்று இல்லை? மந்திரத்தில் மாங்காய் பறிக்க முடியுமா என்கின்றது விஞ்ஞானம்? உன்னால் முடியாதவையும் என்னால் முடியும் என்கின்றது அந்தகால மந்திரங்கள். மந்திரமா அது என்ன? நாம் எழும்புகின்ற ஒலிக்கு சக்தி உண்டு. பரிவுகள் பற்றி அறிந்திருக்கின்றோம். எவ்வாறு நாம் இலத்திரனியல் சக்திகளை மின் கலங்களினுள் சேமிக்கும் ஆற்றலைப் பெற்று இன்று அதனைப் பயன்படுத்துகின்றோமோ, அதுபோல் ஒலிகளில் சக்திகளைக் கொண்டு அவற்றின் மூலம் தமது ஆற்றலை வளர்த்துள்ளார்கள் நமது முன்னோர்கள். அந்த சக்தியைப் பெறும் வழிமுறைதான் மந்திரங்களைக் கொண்டு உச்சாடனம் செய்தல். மந்திர உச்சாடனம் என்பது ஒரு சீரான ஒலி அலைகளை எமது ஆளுமைகளுக்கு உட்படுத்தும் செயல். ஒலி அலைகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து அவற்றின் மூலம் சக்தியைப் பெற்றிருக்கின்றார்கள் எமது முன்னோர்கள். அவ் அலைகளின் சக்தி கொண்டுதான் அந்தக்காலத்தில், அதாவது வேதகாலத்தில் நமக்கு இன்றும் புரியாத புதிர்களையும் அதிசயங்களையும் நடாத்திவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

அவ்வாறெனில் அந்த மந்திரங்களும், அந்த ஆற்றலைப் பயன்படுத்தும் கலையைக் கற்றவர்களும் ஏன் இன்று இல்லை என்ற அடுத்த கேள்வி எழலாம். மகாபாரதப் போரின் பின்னர் கண்ணனின் யாதவர் குலத்தினருக்கு இடையே நடைபெற்ற முறுகலில் யாதவர் குலமே முற்றாக அழிந்துபோய், பின்னர் துவாரகை முற்றாகத் துடைக்கப்பட்டு கடலினுள் மூழ்கியும் விட்டது. இன்றும் கடலின் அடியில் துவாரகையின் அடித்தளத்தைத் தேடிக்கொண்டு இருக்கின்றார்கள். மேலும் மகாபாரதப் போரின் பின்னர் மிச்சமாக மிஞ்சியவர்கள் வெறும் ஏழு பேர் மாத்திரமே. அத்தனை பேரும் அழிந்தது மாத்திரமின்றி அவர்களின் கலையும் அழிந்து போனது. அவர்களின் பின்னர் வந்தவர்களுக்கு அந்தக் கலைபற்றிய அறிவு

இல்லாமல் போயிருக்கலாம். அதனை விடவும் அதனால் விளைந்த அழிவுகளைப் பார்த்தவர்களுக்கு அதனை மீண்டும் பயன்படுத்தும் அவாவும் இல்லாமல் போயிருக்கலாம். குமரிக்கண்டத்தினைக் கடல் கொண்டதோடு முதல் சங்க கால இலக்கியங்கள் யாவும் அழிந்து போயின. ப∴றுளி ஆறும் அதனுடன் இணைந்த பேருமலைத் தொடரும் மட்டும் கடலின் அடியிற்போகவில்லை. அவற்றோடு சேர்ந்து பாண்டி நாடும் கலைகளும் கடலினுள் போனது. இவ்வாறு பல பல சந்தர்பங்களில் அற்புதமான கலைகள் அழிந்துள்ளன. நமது வரலாற்றில் இருந்து அகற்றப்பட்டு இருக்கின்றன. டாவின்சியின் ''தக்கன பிழைக்கும்'' என்பது உயிரினங்களுக்கு மட்டும் பிரயோகிக்கப்படக் கூடிய நியதி இல்லை என்று தோன்றுகின்றது. நம்பி தேவாரத் திருவேடுகளை சிதம்பரக் கோவிலில் இருந்து எடுக்கும் போது அசரீதி சொன்னதும் இதைத்தான். ''இந்தக் காலத்துக்கு தேவையானவையே எஞ்சியிருக்கின்றன'' என்னும் அற்புத தத்துவம்.

ஸ்ரீ கதைகளுக்குள்ளும், புராணங்களுக்குள்ளும் யதார்த்தத்தினையும் வரலாற்றையும் தேடுவது முட்டாள்தனமும், நேரவிரயமும் என யோசிப்பவர்களுக்கு இந்த எழுத்துக்கள் சொல்லும் வாதம் புரிவதற்கில்லை. ஆனால் நமது வரலாறும் அதன் பின்னணியும் புரியாமல், ''இன்று பிறந்தோம், நாளை எங்கோ மறைவோம்'' என்று வாழ்ந்துவிட்டு போவதற்கு நாம் ஒன்றும் காகிதப் பூக்கள் அல்ல. மலர்ந்த தடயம் பதிக்கும் தாழம் பூக்கள் என்பதை மட்டுமாவது ஞாபகப்படுத்துவதே இந்த எழுத்துக்களின் நோக்கம். ''அன்று இதே வெண்ணிலவின் போது எங்களைப் போற்றிப் பாதுகாத்த தந்தையும் எங்களுடன் இருந்தார். எங்களுக்கான நாடும் எங்கள் வசம் இருந்தது. இன்று எங்கள் தந்தையையும் இழந்தோம். நாட்டையும் இழந்தோமே'' என முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளலின் இருமகள்கள் அங்கவையும், சங்கவையும் கதறிய கதறல் புறநானூற்றைப் புரட்டிப் பார்த்தவர்களுக்குத் தெரியும். வரலாறு என்பது ஒரு வட்டப்பாதை அவை சொல்லும் பாடங்கள் ஏராளம். நேற்று நடந்தவை நாளை மீண்டும் திரும்பிவரும் அபிமன்யுவும், அங்கவையும், சங்கவையும் மீண்டும் மீண்டும் தோன்றுவதைத் தவிர்க்க இயலாது.

*– வஞ்சி –*
மட்டம் - 4
பொறியியல் பீடம

உன் நினைவுகள் என் கூட இருக்கும் போது
என் சந்தோஷத்துக்கு ஏது குறை?
- நந்தன்

*With Best Compliments From*

சங்கமம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**பூபாலசிங்கம் புத்தக நிலையம்**
**யாழ்ப்பாணம்**

*With Best Compliments From*

சங்கமம் நூலை பெருமையுடன் வாழ்த்தும்

பிரபல இணைந்த கணித ஆசிரியர்

திரு. செந்தில்நாதன்

*With Best Compliments From*

சங்கமம் இனிதே நடைபெற வாழ்த்தும்

பிரபல உயிரியல் ஆசிரியர்

திரு. கங்காதரன்

*With Best Compliments From*

**Jeya Ganesha Stores**

**ஜெய கணேசா களஞ்சியம்**

பஸ் நிலையம், பருத்தித்துறை

*With Best Compliments From*

**RAJAN ELECTRICALS**

Dealers in Harware Electrical Goods, S.Lon pipes & Authorised
Dealer for C.I.C. Paints & Lanka Pride Paints

Main Street, Point Pedro

# ஞாபகங்கள்

காலை 6.15
மூன்றாம் இலக்ககாரி முத்தழகி வரும்....
முச்சந்தியில்....
மெதுவாக சைக்கிள் விட்டு - அவள்
மூன்றாம் வரிசையில் உட்கார...
நான்காம் வரிசையில் நான்.... Science Hall இல்

அவள் தன் பள்ளி செல்ல...
பின் சென்று - பின்
முன் சென்று - முண்டியடித்து... அதன் பின்
என் பள்ளியில் நான்...

அவசரமாக வீடு வந்து
உடைமாற்றி...
நம் வீட்டு வாசல் நின்ற
ஆலமரத்தடி மதகில் அலுப்படிக்காமல் காத்திருந்து...
அவள் பின் 'நிரு' வரை மீண்டும்.

இரண்டரை வருடம்
முழுதாய் முடிய,
கொழும்பு...

கொழும்பில்
5ம் மாடி - முன் மாடிக்கு
காற்றில் விட்ட தொலைபேசி இலக்கங்கள்...

பல்கலையில்...

நம் தலைநகர பெரிய வாளி Vibration...
நண்பர்கள் தலைநகர 'வசந்த' வாளியுடனும்...
தமிழ்ச்சங்க சந்தியில்
பட்டுப் பாவாடைகளின்
பார்வைக்காக...

குழுவிற்குள் போட்டியிட்டு - மன்மத
குஞ்சாக மாறிய - நெடியவனுடன்
நித்தமும் பிற்பகலில் - நீண்ட நெடிய பயணம் - யாழில்
வளரும் பிள்ளைகளுக்காக - விடுமுறையில்...

கறுப்பானாலும் களையானவன்-
கணக்கு ரீச்சரையோ கணக்கு பண்ணுபவன்-
இவன் வாங்கும் நோண்டிகள் அறவிடமுடியாகடன்..
கன்னிகளிடம்..

வெளியில் ஒன்றும் இல்லை..
மறைவில் (இரவில்) - கொழும்பு பள்ளி பெண்களுடன்
கொழுத்த அரட்டை..
ஆத்துக்காரி இல்லாவிட்டாலும்...
வீட்டுக்காரி வருவாள் என்று KFC சந்தியில்..
காத்திருக்கும் நண்பன்...

உயர்தர நோக்கோடு,
உண்ணாவிரதம் இருந்தவனின் பெயரில்...
பல்கலைக்கு உள்ளொன்று - வெளியில்,
இன்னொன்று என்று காலத்தை கடத்துபவன்...

ஏர்பூட்டி, உழவடிப்பேன் என்று
மூஞ்சிபுத்தகத்தில் -
'சாகித்தியமாய்' சொல்பவன் - வேறு

காதலில் தோத்தாலும்
காணாததை கண்டால், கண்டநாட்டிலும்
கூத்தடித்து - காட்சிப்படுத்தி ஜெ(யந்)யித்தவன் மறுபுறம்...

ஈராண்டு மூத்தாலும் - மூச்சாக...
'அந்த' மருத்துவிச்சி தான் வேண்டும் என்று
முயற்சி எடுக்கும் 'ஏ...அம்பு மகன்...

தரணியில் உள்ள - வரணியை தேடி...
காண்டத்துடன் கலக்கும்
அட்டைப்பட ஓவியன்.

சைக்கிளில் தொடங்கி - இன்றுவரை..
Sunday ல் One Day
Gap பிற்குள் T20
ம்... ம்... நம் புகழ் பூத்த தளபதி இவன்

பெண் பார்த்தாச்சு...
விருந்தும் கலந்தாச்சு...
மலர்மாலை Stuck ஆச்சு... நம்ம Submarrine..
இரண்டு எனக்கு ஒன்றுனக்கு

ஒற்றை கை...
விரல் ஒன்று கழிய..
வருடங்கள் ஆகியும்...
எல்லோரும் - கஞ்சிக்காக
இனி...
அதுக்குள்ளே 'சங்கமம்' புத்தகத்துக்காக
கவிதை வேறு...

வாழ்க்கை சோற்றுக்காக - நேர்முகத்தேர்வு...
தேர்வுகள் தோற்று தேற்றி...
இனி - நம்பிக்கையுடன்...
கல்யாணப் பத்திரிகைகள் காத்திருக்கின்றன....
நண்பர்கள் நாம்...
மீண்டும் ஒன்று சேர....

*(யாவும் கற்பனை)*
*– பாமரன் –*
மட்டம் - 4
பொறியியல் பீடம்

With Best Compliments From

ரூபிகா

Roobiga



இரத்தினக்கல்,
தங்கப்பவுண் வியாபாரம்

164/A, Kasthuriyar Road,
Jaffna.

*With Best Compliments From*

# Srimurugan Medical Stores

❖

❖

❖

## Main Street, Point Pedro

❖

❖



# தோல்வி என்றால்

- நீங்கள் தோற்றுப் போனவர் என்று பொருள் அல்ல
  நீங்கள் இன்னமும் வெற்றியை அடையவில்லை என்று பொருள்
- நீங்கள் சாதிக்க முடியவில்லை என்று பொருள் அல்ல
  சில பாடங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்
- நீங்கள் அவமானப்பட்டு விட்டீர்கள் என்று பொருள் அல்ல
  உங்களுக்கு சவால் ஒன்று உள்ளது என்று பொருள்
- உங்கள் முயற்சி பலனளிக்கவில்லை என்று பொருள் அல்ல
  வேறு உத்திகளைக் கையாள வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறீர்கள் என்று பொருள்
- வாழ்க்கையே வீணாகிப் போய்விட்டதென்று பொருள் அல்ல, மீண்டும் ஆரம்பிக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதென்று பொருள்
- விட்டுவிட வேண்டும் என்று பொருள் அல்ல,
  இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்று பொருள்
- உங்களால் அடைய முடியாது என்று பொருள் அல்ல
  அடையக் கொஞ்சம் தாமதமாகலாம் என்று பொருள்
- கடவுள் உங்களைக் கைவிட்டு விட்டார் என்று பொருள் அல்ல
  உங்களுக்கு நல்ல எதிர்காலத்தை நிர்ணயித்து விட்டார் என்று பொருள்.

எல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ளுங்கள்

**– யோ. றொபேட் ரவிச்சந்திரன் –**
மட்டம் - 4
பொறியியல் பீடம்

*With Best Compliments From*

இந்திரா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
INDRA HARDWARE STORES
131, Stanley Road, Jaffna. T.P : 0212228307

*With Best Compliments From*

## மஹாலக்ஸ்மி ஸ்ரோர்ஸ்

பஸ் நிலையம்,
பருத்தித்துறை

*With Best Compliments From*

## ஜனனி களஞ்சியம்

பிரதான வீதி,
நெல்லியடி

*With Best Compliments From*

## Thamil Poonka Printers

சகல விதமான அச்சுவேலைகளையும் கணணி, ஒவ்செற், ஸ்கிறீன் பிறிண்டிங் மூலம் அமைத்துத்தர நாடவேண்டிய ஒரே இடம்

பிரதான வீதி, நெல்லியடிச கரவெட்டி T.P : 021 2264014

*With Best Compliments From*



## ஜெயசெந்தினி நகை மாடம்



பிரதான வீதி, நெல்லியடி


T.P : 021 2264014

# என் தந்தையே!!

அப்போ அறியாத வயசு அழக்கூடத் தோணலை;
ஏதோ விசேஷம் மாதிரித்தான் தெரிந்தது;
பந்தல் போட்டார்கள்; தோரணம் கட்டினார்கள்;
வாழை நாட்டினார்கள்; தேவாரம் கூட பாடினார்கள்;
ஊரே வந்தார்கள், ஆனால் சொல்லாமலே வந்தார்கள்;
ஒருநாளும் வராத சொந்தங்கள் சிலரும் வந்தார்கள்;
அண்ணாவும் வாரானாம், ஆனால் அப்பா மட்டும்
எந்தவித சலனமும் இல்லாமல் சயனித்திருந்தார்;
சால்வையை கொடுத்து வேட்டியாக கட்ட சொன்னார்கள்;
எதுவுமே புரியலை
கடவுளை கேட்டேன் ஏன் என்று;
கொஞ்சமாய் புரிந்தது;
ஏன் கடவுளே நீங்கள் நினைத்தால் முடியாதா? என்
அப்பாவை திருப்பித்தர,
அப்பா கிட்டக்கூட போகலை,
கடைசியாக பார்க்கணும் என்றுகூட தோணலை;
ஏன், எனக்கு அழக்கூட தோணலை,
ஏன் அழணும்? சத்தியமா எனக்கு புரியலை;
புரியலை!
அப்பாவுக்கு பொட்டிட்டு,
உணவூட்டி
பால் குடிக்க கொடுத்து....
சிறு தணல் தந்தார்கள்....
இன்னும் சில நினைவுகள்...
அப்போ தெரியவில்லை ஒன்றுமே, போக போக புரிந்தது
அப்பா நிரந்தரமாய் போய்விட்டார்,
அன்று அழாததை இன்று பல இரவுகளில் அழுதுகொள்கிறேன்,
இனி எப்போது கேட்பேன் ''ரூபன் படிப்பு எப்படிப்போகுது'' என்ற
வார்த்தையை......

– *லோ. நந்தரூபன்* –
மட்டம் - 04
பொறியியல் பீடம்

*With Best Compliments From*



# Strangers. Learning

*Academy of Professionals*

Strangers Learning is subsidiary of Strangers group (pvt) Ltd, provides a wide range of training and consultancy services on Information Communication Technology (ICT), Professional and Entrepreneurship Development and Career guidance. We maintain a professional approach building a rapport with you and your business and treating it like our own.

## INTERNATIONAL CERTIFICATE COURSES-Microsoft Career

For the First Time Microsoft Recognized & World Accepted studies are for you in Trincomalee. Strangers. **Learning** is Proud to announce the Microsoft Certification Programme. This programme is designed for those who wish to become Microsoft Specialist in this global.

CHOOSE YOUR CREDENTIAL

Microsoft Certificate Professional (MCP)
Microsoft Certificate System Administration (MCSA)
Microsoft Certificate System Engineer (MCSE)



The benefits you receive as part of the Microsoft Certified Professional (MCP) community can help you:

Keep your skills relevant, applicable, and competitive.

Take certification with you on your career journey.

Be a part of an active community of certified professionals around the world.



REACH THE NEXT LEVEL



TAKE YOUR FIRST STEP TO A SUCCESSFUL CAREER

### About Microsoft Certifications

Show off your unique skills and validate your knowledge by obtaining a certification that matches your current or desired job role.


Microsoft Certifications provide you with access to unique resources and offer you a life-long career path for developing your IT skills.

Choose a certification track that matches your current or desired job role.

### Why Get Certified?

Earning a Microsoft Certification demonstrates your expertise with Microsoft products and platforms. your job-related experience, and your technical problem-solving skills.
Microsoft Certifications are continually evaluated and updated to ensure their relevancy in the marketplace.

As a result, earning a certification not only helps you stay up-to-speed on the latest Microsoft technologies and platforms, but showcases your skills and value on the job.



Your Job and Microsoft Certification Options
Network Administrator, Software Engineer
Systems Engineer, Network Engineer,
Technical Consultant, Technical Support
Engineer, System Analyst and System Analyst.

BREAK THE BARRIER BOOST YOUR CAREER

### Exam Requirements

Please select a Microsoft exam from any certification track here.
If you intend to continue pursuing a certification track after earning your MCP credential, you may want to choose an exam that will apply to that track.

### MCP | MCSA | MCSE EXAMS

- 070-270 Installing, Configuring, and Administering Microsoft Windows XP Professional.
- 070-290 Managing & Maintaining a Microsoft windows server environment.
- 070-291 Implementing, Managing, and Maintaining a Microsoft Windows Server 2003 Network Infrastructure.
- 070-293 Planning and Maintaining a Microsoft Windows Server 2003 Network Infrastructure.
- 070-297 Planning, Implementing, and Maintaining a Microsoft Windows Server 2003 Active Directory Infrastructure.
- 070-297 Windows Server 2003 Active Directory and Network Infrastructure.
- 070-298 Designing Security for Windows 2003 Network.

Course Duration: 03 Months
Every Level Contain 03 Months
Entry Recruitment G.C.E.O/L or
Know in Computer Hardware

*With Best Compliments From*

## Our Professional Courses

Preliminary Certificate in Marketing (PCM)

Whether you are a 18 year old, working adult, an Accountant, or an Engineer, or Even a lawyer, your success depends on your marketing skills no Metter in whatever the profession you are PCM is the only Qualification that arms you with marketing skills in just three months.

Course Structure

This course is presented as a modular programme with three parts. Details of the modules are as following.

- Part One: Introduction to Marketing
- Part Two: Marketing Mix Strategies
- Part Three: Marketing Decision/Implementation


SLIM
Sri Lanka Institute of Marketing

Entry Qualification: GCE (O/L), Working adult
Achieve the highest status as a Marketer

*Join for Success.................. Join PCM*
*One of the World's Best Short Courses in Marketing*

## Other Facilities Available here

- Certificate in Internet & E-mail - 04Hrs
- Internet Browsing for School Students and Officers- An hour rs.20/- only
- Application Software e-books available



- MS Word 2007
- MS Excel 2007
- MS Access 2007
- Photoshop CS4
- VB and Java
- Etc...
- Career guidance |Vacancies Notice
- Application Software Video Tutorials are available at Strangers.Learning

### Certificate in Human Resource Management (HRM)

For Whom?

- Students who A/L completed who wish to pursue a HRM career
- Junior Admin staff who require a basic HRM qualification
- Middle level Managers who need theoretical input on marketing
- Other working adults who wishes to gain knowledge on HRM


### Diploma in Multimedia

1. Digital Video/Audio Production
   Adobe Premiere
   Adobe after Effect
   Sound Forge
2. 3D Animation

### Multimedia Certificate Course

- Adobe Illustrator CS4
- Adobe Photoshop CS4
- Macromedia Flash CS4

### PICTURE GALLERY



- Highly qualified and experienced panel of lecturers
- Unlimited practical time
- Flexible payment options
- Part time/Full time batches with convenient lecture schedules
- Individual attention to everyone in the class.
- Convenient location Beside the main road
- Free internet browsing For Strangers students

## OUR STANDARD COURSES

**Dip in Office Management**

- MS Word 2007
- MS Excel 2007
- MS Power Point 2007
- MS Access 2007
- MS Publisher 2007
- Internet & E-mail

Durations: 03 Months

**Cert in Graphic Designing 2D**

- Adobe Photoshop CS4
- Ulead Photo Impact
- Macromedia Flash CS4
- Swish Max

Durations: 04 Months

**Certificate in Web Designing**

- Web Designing Languages
- MS Front Page 2003
- Macromedia Flash CS4
- Macromedia Dreamweaver CS4
- Adobe Photoshop CS4
- Ulead GIF Animator
- Java Script

Durations: 03 Months

**Cert in Computer Hardware**

- Fundamental of Computer Hardware
- Assembling & installing
- Troubleshooting
- Tools & Utilities
- Virus, Antivirus
- Introduction of Networking
- Network Topologies
- Workgroup VS Client Server
- Firewall

Duration: 03 Months

**Certificate Courses**

- AutoCAD 2007 2D & 3D
- Visual Basic
- VB & Java Script
- Adobe Photoshop CS4
- Corel Drew 12
- Macromedia Flash CS4
- Adobe Illustrator CS4
- Adobe after effect CS4

**Professional Courses**

- Dip in Project Management.
- Nonviolent Communication(NVC)
- Dip in English (Spoken)
- Dip in Professional English
- Sinhala Language (Grammar & Spoken)

### Elocution for Kids (Age: 13-16 years)

Parents who are interested in educating their children in the medium of English for better future prospects.
Free Computer course for those who follow the Elocution course

For More Information Please Conduct:
Training & Consultans
Strangers.Learning
28.Vidyalam Street, Trincomalee
☎026-2222648 ☎0778202723
strangers.learning@live.com

*With Best Compliments From*

## NELLAI SILK

## நெல்லை சில்க்



**Main Street,**
**Nelliady**
**TP : 0212263207**

பிரதான வீதி,
நெல்லியடி

*With Best Compliments From*

சங்கமம் சிறப்புற வாழ்த்துகிறோம்

**Professional Photographers**



## Kugan Studio

Kandy Road,
Chavakachcheri

*With Best Compliments From*




## ABISHA TEX



**No. 09, New Market (inside)**
**Chavakachcheri**
**T.P : 0779124249**

*With Best Compliments From*

## Banuga Nagaiaham



## பாணுகா நகையகம்



T. மனோகரன், T.P : 0779360579

# ஹாரிஷ் ஜெயராஜுடன் வேறு இசையமைப்பாளர்கள்

இசையமைப்பாளர்களிடையே மெலடிகிங் ஹாரிஷ் ஜெயராஜிற்கு மற்றைய இசையமைப்பாளர்களை விட தனிச்சிறப்பொன்று உண்டு. இவரது இசையில் வரும் பாடல்கள் பெரும்பாலானவற்றில், ஒரு புரியாத கவர்ச்சியான, உற்சாகமான வார்த்தைப் பிரயோகம் வந்து, அப்பாடலை அது சுப்பர் ஹிட்டாக்கும். அந்த சிறப்பை விடுத்து, வேறு பல சக இசையமைப்பாளக்களுக்கு தான் இசையமைக்கும் படங்களில் பாடவாய்ப்பு கொடுக்கும் பெருந்தன்மையே அதுவாகும். இவ்வாறு மற்றவர்களுக்கு பல வாய்ப்புகளை வழங்குகின்ற போதிலும் தனது சொந்த குரலில் இவர் ஒரு பாடலையேனும் இன்னும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு பேட்டியில் இதை (மற்ற இசையமைப்பாளர்கள் பெரும்பாலானோர் அவர்களது சொந்த இசையில் பாடுகின்றனரே நீங்கள் பாட விரும்பவில்லையா?) கேட்டபோது ''என்னை விட திறமையாக பாட கூடியவர்கள் நிறையப்பேர் வெளியே இருக்கின்றனர். நான் வீண் பரிசோதனையில் இறங்க விரும்பவில்லை'' என்றார் பெருந்தன்மையுடன்.

A.R.Rahman ற்கு அடுத்த படியாக தமிழில் கூடுதலாக ஒரு படத்திற்கு ஊதியம் பெறும் இசையமைப்பாளராக இருக்கும் ஹாரிஷ், திறமை உடையவர்கள் தனது போட்டியாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நல்ல குணம் கொண்டவராக இருக்கிறார்.

இவ்வாறு இவர் பாடவைத்த இசையமைப்பாளர்களின் பெயர் பட்டியலும், அவர்களுக்கு இவர் கொடுத்த பாடலும், படத்தின் பெயரும் கீழே

1. ரமேஷ் விநாயகம் - ''யாரிடமும் தோன்றவில்லை'' (தொட்டி ஜெயா)
2. ஜாஸி ஹீப்வ்ட் - ''அண்டங்காக்கா'' (அந்நியன்)
3. பிரேம்ஜி அபரன் - ''Hey Girls'' (12B), ''அடகடகட'' (சத்யம்)
4. G.V. பிரகாஷ்குமார் - ''காதல் யானை'' (அந்நியன்), '' X மச்சி'' (கஜினி)
5. யுகேந்திரன் - ''முதன் முதலாய்'' (லேசா லேசா), ''கல்யாணம் தான்'' (சாமி)
6. கைலாஷ்கர் - ''ரங்கு ரங்கம்மா'' (பீமா), ''உய்யிலால'' (தாம் தூம்)
7. லெஸ்லி லூயிஸ் - ''கண்ணும் கண்ணும்'' (அந்நியன்)
8. சுருதிஹாசன் - ''அடியே கொல்லுதே'' (வாரணம் ஆயிரம்)
9. சங்கர் மகாதேவன் - ''குமாரி'' (அந்நியன்), ''ரங்கோலா'' (கஜினி)
10. கரிகரன் - ''நெஞ்சுக்குள் பெய்திடும்'' (வாரணம் ஆயிரம்)

மேலே குறிப்பிட்ட சிலரை இசையமைப்பாளர்கள் இன்று சிலருக்கு தெரிந்திருக்காது. அவர்கள் பெயருடன் அவர்கள் இசையமைத்த படங்கள் கீழே...

- ரமேஷ் விநாயகம் - அழகியதீயே, நளதமயந்தி, ஜெர்ரி
- பிரேம்ஜி அமரன் - நெஞ்சத்தை கிள்ளாதே, தோழா, அதேநேரம் அதே இடம்
- ஜாலி ஹப்வ்ட் - 4 students, தீநகர், பட்டாளம்.
- யுகேந்திரன் - வீரமும் ஈரமும், பலம்
- கைலாஷ்கர் - Dasvidaniya, The traffic Signal (ஹிந்தி படங்கள்)
- லெஸ்லி லூயிஸ் & ஹரிகரன் - மோதி விளையாடு, Colonial Cousions (Fusion Album)
- சுருதி ஹாசன் - உன்னைப்போல் ஒருவன், வேறு அல்பங்கள்
- சங்கர் மகாதேவன் - ஆளவந்தான், யாவரும் நலம்

சங்கர் மகாதேவன் இசையமைக்கும்போது Eshaan - Loy இருவருடன் சேர்ந்தே இசையமைக்கின்றார் 3 பேர் கொண்ட கூட்டணி இசையமைப்பு இது.

இந்த ஆக்கம் Youthful Vikatan ல் Good Blogs பகுதியில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது.

*– கார்த்தி –*

மட்டம் - 4

பொறியியல் பீடம்


*With Best Compliments From*

மனம் கவரும் நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றிட



# THUVARAGA
## JEWEL HOUSE

ஓடர் நகைகளை குறித்த தவணையில் நவீன டிசைன்களில் செய்து பெற்றிட

புன்னகை சிந்தும்
பெண்ணுக்கு பொன்னகையே பேரழகு

No. 118, Kasthuriyar Road, Jaffna, T.P : 021 2229421

# தனித்திருக்கும் அவலம்.....

வாழ்க்கையை விரட்டிக் கொண்டிருக்கிறது
காலம் அதன் போக்கில்
காற்றின் திசையில் அடித்துச் செல்லப்படும்
சிறு துரும்பு போல்

இலட்சியங்களை தொலைத்து
இலக்குகள் உடைக்கப்பட்டு
இடமின்றி அலைகிறான்
எம்மவன்
மண் இழந்து, அன்னை
மடி இழந்து
சுற்றம் களையப்பட்டு அவன்
தனித்திருக்கும் அவலம் பேரவலம்...

கண்கள் பார்க்காத காதல்
உறவுகள் கூடாத திருமணம்
இனிமைகளற்ற இயந்திர இளமை
கலாசாரம் தெரியாத எதிர்காலத்தலைமுறை
எல்லாவற்றுடனும்
உலகமயமாக்கலின் பரிணாம வளர்ச்சிகண்டு
வியந்து வியர்க்க அவன் தனித்திருக்கிறான்

வசந்த கால இரவில் நிலாச்சோறுண்டு
மென்தமிழினதும் செம்மொழியினதும்
மேன்மை காக்க
நித்திய இளம் தென்றலை நிரந்தரமாய்
சுவாசிக்க - தொன்று தொட்ட மண்ணில் வாழ
நிஜங்களை கண்டு கொண்டே
நட்டாற்றில் அவன்
தனித்து எதிர் நீச்சல் போடுகின்றான்

வழியறியாது தடுப்பனையின்றி
சென்று கொண்டிருக்கின்றது எம்மின எதிர்காலம்
அறியாத கிணற்றில் இருக்கும்
நுணல்களைப் போல

ஏமாற்றமாய் அழுது கொள்ளும்
இன்றைய நாளை
முடிப்பதற்காய் அலைகின்றேன் - தீயனை போல்
உன் தனிமையின் அவலம் கண்டு.

*ம. பகீரதன்*
மட்டம் - 4
பொறியியல் பீடம்


*With Best Compliments From*

# க.அ.சின்னையாவும் மைந்தர்களும்
# K. A. CHINNIAH & SONS


*மேசை விரிப்பு, வாகன, தளபாட ஆசனத் தயாரிப்பு, பாதணி உற்பத்திப் பொருட்கள், விற்பனையாளர்கள்.*

44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

*With Best Compliments From*




# சிறீ மீனாட்சி நகை மாளிகை
# SREE MEENAATCHI GOLD HOUSE

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 0212226109

*With Best Compliments From*

# BHARATH STUDIO



# பாரத் ஸ்ருடியோ
32/1, Kasthuriar Road, Jaffna

கணணி மூலம் புகைப்படங்கள் வடிவமைத்து டிஜிற்றல் அல்பம் கட்டுதல் மற்றும் கறுப்பு வெள்ளை படங்களை கலர்ப்படங்களாக மறுசீரமைத்து குறித்த நேரத்தில் செய்து தரப்படும்

# சராசரி காதலன் நான்

அவள் பின்னாலேயே, அவளுக்கு தெரியாமல் அவள் நிழலாய் தொடந்த
சராசரி காதலன் நான்

அவள் வரமாட்டாள் என்று தெரிந்தும் திருவிழா கூட்டத்தில் அவளை தேடிய
சராசரி காதலன் நான்

அவள் கசக்கிப்போட்ட காகிதத்தை பொக்கிசமாக்கிய
சராசரி காதலன் நான்

அவள் பெயரை எந்தன் புத்தகத்தில் முதல் பக்கத்தில் எழுதிய, எழுதும்,
சராசரி காதலன் நான்

அவள் பெயரை பொறிப்பதற்க்காய் லாம்பினால் என் கையை சுட்ட
சராசரி காதலன் நான்

அவள் பிறந்த நாளுக்கு "என் அம்மாடை birth day டா" என நாகூசாமல் பொய்சொல்லி Party கொடுத்த
சராசரி காதலன் நான்

அவள் பெயருக்கு அக்கம் பக்கம் பாத்து யாருமில்லா நேரம் அர்ச்சனை செய்த, செய்யும்
சராசரி காதலன் நான்

அவளின் ஐந்து நிமிட தரிசனத்துக்காய் பலமணி நேரம் கால்கடுக்க நின்ற
சராசரி காதலன் நான்

அவள் என நினைத்து அவள் அக்காவுக்கு "I Love You" sms அனுப்பிய
சராசரி காதலன் நான்

அவளது "I Love You" என்ற வார்த்தைக்காக 4 வருடம் காத்திருந்த
சராசரி காதலன் நான்

அவளது "Good Morning" SMS இற்க்காக தவமிருந்து தூக்கம் கலைக்கும்
சராசரி காதலன் நான்

அவளது முதல் வாழ்த்துக்காய் நண்பர்களது Call ஐ Cut பண்ணிவிடும்
சராசரி காதலன் நான்

அவளுடனான வாழ்விற்காக, என் அம்மாவின் சம்மதத்திற்காக காத்துக்கொண்டிருக்கும், வாழ்நாள் பூரா காத்திருக்க தயாரான
சராசரி மகனாக நான் இன்று

*லோ. நந்தரூபன்*
மட்டம் - 4
பொறியியல் பீடம்


பிறக்கும் போதும் கண்ணீர்
இறக்கும் போதும் கண்ணீர்
இடையில் தான் சிரிப்பு
அதைக்கூட சிலருக்கு கொடுக்க
மறந்த இறைவன்
**- நந்தன்**

*With Best Compliments From*




# JAFFNA ELECTRICALS

## Dealers in Electrical & Electronic



Authorized Dealer for Abans Ltd

Sole Distributer for Kml Cables, Kml PVC Pipes



No. 141, Power House Road,
Jaffna, Sri Lanka.
T.P : 0212225766
Fax : 021 222 2552
E- Mail : matheesan16@yahoo.com

No. 94(6), Stanley Road,
Jaffna, Sri Lanka.
T.P : 0212222353

*With Best Compliments From*





# JEGA MOTORS

## ஜெகா மோட்டோர்ஸ்

## ஹாட்வெயர்



**Dealers in Electrical goods, Paint & Electrical Contractors**

Jaffna Road Valvetty, Valvettithurai

# உங்கள் கம்ப்யூட்டர் தூங்கி வழிகிறதா?




உங்கள் கம்ப்யூட்டர் தூங்கி வழிகிறதா? பாயும் குதிரையாய் பல மாதங்களுக்கு முன் ஓடிய விண்டோஸ் இப்போது தவழ்கிறதா? ஒவ்வொரு document ம் worksheet ம் edit செய்து print எடுக்கும் முன், போதும் போதும் என்றாகிறதா? கவலைப்படாதீர்கள். சில விஷயங்களைக் கவனித்தால் போதும் வேகமாக ஓடாவிட்டாலும், நமக்கு எரிச்சல் தராத வேகத்தில் விண்டோஸ் இயங்கும். இவற்றை இங்கு காண்போம்.

கம்ப்யூட்டர் வேகமாகவும் அனைத்து திறனுடனும் இயங்க வேண்டும் என்றால், விண்டோஸ் operating system ஐ மட்டும் மீண்டும் மீண்டும் tune செய்து பயனில்லை. அதிக வேகம் தரக்கூடிய hardware பாகங்கள் இணைக்கப்பட வேண்டும். இந்த வகையில் நாம் முன்னுரிமை தர வேண்டியது RAM memory மற்றும் Graphics Card ஆகும். இவற்றை நாமே இணைப்பதாக இருந்தால், நம் உடலில் இருக்கும் static மின்சாரம் கம்ப்யூட்டரின் நுண்ணிய பாகங்களுக்குக் கடத்தாமல் இருக்கும் வகையில் அதனை வேறு உலோகங்களைத் தொடுவதன் மூலம் discharge செய்திடலாம்.

RAM memory பலவகைகளில் கிடைக்கிறது. DDR2, DDR3 மற்றும் பல பழைய வகைகளில் உள்ளது. தற்போது வரும் கம்ப்யூட்டர்களின் motherboardகள் குறிப்பிட்ட வகை RAM chip களை மட்டுமே ஏற்றுக் கொள்ளும். எனவே கம்ப்யூட்டருடன் தரப்பட்ட குறிப்பேட்டினைப் பார்த்து, எந்த வகை RAM chip னை motherboard ஏற்றுக் கொள்ளும் எனப் பார்க்கவும். உங்கள் memory னை 4 GB மேல் உயர்த்துவதாக இருந்தால் operating system 64 bit சிஸ்டமாக இருக்க வேண்டும். விண்டோஸ் 7 operating system 64 bit வகையில் கிடைக்கிறது. இதனைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் கம்ப்யூட்டரை அடிக்கடி games விளையாடப் பயன்படுத்தாமல் இருந்தாலும், அதிக திறன் கொண்ட graphics card ஒன்றை கம்ப்யூட்டரில் நிறுவுவது நல்லது. குறிப்பாக விண்டோஸ் 7 மற்றும் விஸ்டா அவற்றின் User Interface திரைகளின் காட்சித் தோற்றங்களைச் சிறப்பாக அமைத்திருப்பதால், graphics card அதிக திறனுடன் இருப்பது இவற்றின் பயனை நன்கு நமக்குத் தரும். உங்கள் oprating system விண்டோஸ் Xp, விண்டோஸ் விஸ்டா அல்லது விண்டோஸ் 7 என எதுவாக இருந்தாலும், இதனுடன் ஓட்டிக் கொள்ளும் தேவையற்றவைளை அவ்வப்போது நீக்குவது, இவற்றின் வேகமான செயல்பாட்டை உறுதி செய்திடும்.

தேவையற்ற process, செயல்படுத்தாத startup programகளை நீக்கவேண்டும். இதனால் விண்டோஸ் தன் சக்தியை இவற்றில் ஈடுபடுத்தாமல், தேவைப்படும் program களில் மட்டுமே பயன்படுத்த வழி கிடைக்கும்.

விண்டோஸ் Xp யில், system control panel ஐத் திறந்திடவும், அதில் advanced tapeல் கிளிக் செய்திடவும் பின் settings என்பதனைத் தேர்ந்தெடுக்கவும் இதில் adjest bar best performance என்ற ரேடியோ பட்டனைக் கிளிக் செய்திடவும். இதனால் menu வின் கீழாக drop shadow போன்ற அலங்கார வேலைப்பாடுகள் நீக்கப்படும்.

விஸ்டாவில் side bar செயல் இழக்கச் செய்வதன் மூலம், இந்த செயல்பாட்டினை மேற்கொள்ளலாம். விண்டோஸ் விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 systemகள் aero சூழ்நிலையை நிறுத்துவதன் மூலம், கம்ப்யூட்டரின் memory ஐயும், செயல்திறன் சக்தியையும் processing Power மேம்படுத்தலாம். இதற்கு destop ல் right கிளிக் செய்து, context மெனுவில் personalize என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். விஸ்டாவில் window colour and appearance என்பதை கிளிக் செய்து அதில் எனேபில் ட்ரான்ஸ்பரன்ஸி enable tansparency என்பதில் உள்ள tick அடையாளத்தை எடுத்து விடவும். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் windows 7 basic) என்ற theme ஐ தேர்ந்தெடுக்கவும்.

நாம் அடிக்கடி இணையத்தில் பார்க்கும் பல program களை கம்ப்யூட்டரில் install செய்துவிடுகிறோம். இவற்றை install செய்கையில், சிஸ்டம் தொடங்கும் போதே, அவற்றைத் தொடங்கும் வகையிலும் அமைத்துவிடுகிறோம். இதனால் நமக்குத் தேவையான, அன்றாடம் பயன்படுத்தப்படுகின்ற (Ms office, Pagemaker, Photoshop போல) புரோகிராம்களின் இயக்க வேகம் பாதிக்கப்படுகிறது. முதலில் சொல்லப்பட்ட பயன்படுத்தாத பல புரோகிராம்கள், இவற்றின் பின்னணியில் இயங்குவதே இதற்குக் காரணம்.

விண்டோஸ் 7 மற்றும் விஸ்டாவில், start கிளிக் செய்து search programs and files என்ற fieldல் msconfig என டைப் செய்து enter பண்ணவும். System Comfiguration விண்டோ இப்போது கிடைக்கும். இவற்றில் உள்ள tape களில் Startup என்ற டேப்பில் கிளிக் செய்திடவும். இனி command பிரிவில் உங்களுக்குத் தேவைப்படாத program உள்ளதா எனப் பார்க்கவும். எடுத்துக் காட்டாக, iTunes வந்த காலத்தில் அதனைப் பதிந்திருக்கலாம். இதனால் iTuneshelper.exe மற்றும் QTTask exeஎன்ற இரு file கள் இயங்கியவாறு இருக்கும். இவற்றினால் எந்த பயனும் தனியாக இல்லை. இது போன்ற தேவையற்ற புரோகிராம்கள் ஸ்டார்ட் அப்பில் இயக்கப்படுவதைத் தடுக்கலாம். இதனால் RAM memory இடம் காலியாகி, அவசியமான programகள் வேகமாக இயங்க வழி கிடைக்கும்.

system இன்னும் சுறுசுறுப்பாக இயங்க, அடிக்கடி c drive ன் விண்டோஸ் directoryல், temporary folderல் உள்ள file களைக் காலி செய்திட வேண்டும். operating system இயங்கியவுடன் இவற்றைக் காலி செய்திட வேண்டும். அல்லது safemodeல் சென்று இவற்றைக் காலி செய்திடலாம். இதனால் பயன்படுத்தாத fileகள் பட்டியலில் உள்ள கடைசி file வரை நீக்க முடியும். இதற்கு ஏற்கனவே இந்த பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்ட C cleaner போன்ற programகளைப் பயன்படுத்தலாம்.

இதில் இன்னும் ஒன்றைக் கவனிக்கலாம். ஏதேனும் ஒரு program இனை கம்ப்யூட்டர் இயக்கத்திலிருந்து அறவே நீக்க அதனுடன் தரப்பட்டிருக்கும் uninstall file ஐ பயன்படுத்துகிறோம். விண்டோஸ் 7ல் uninstall செயல்பாட்டுக்கென ஒரு program file தரப்பட்டுள்ளது. ஆனால் இவற்றைப் பயன்படுத்தினாலும் சில fileகள் கம்ப்யூட்டரில் ஒடிக்கொண்டுதான் இருக்கும். அறவே அனைத்து fileகளை நீக்க சில third party programகள் இணையத்தில் கிடைக்கின்றன. இவற்றில் Revo Uninstaller from http://www.pcworld.com/ downloads file/fid, 66703order, 6 page, 1/description.html என்னும் program சிறப்பானதாகும். இதனை இலவசமாக இறக்கிப் பயன்படுத்தலாம். இந்த program, குறிப்பிட்ட programன் uninstall பைலைப் பயன்படுத்தியே அனைத்து fileகளையும் நீக்குகிறது.

பின் மேலும் ஒரு படி சென்று systemஐ scan செய்து, registory ஐத் தேடிப் பார்த்து நீக்கப்படும் program சார்பான அனைத்தையும் நீக்குகிறது.

Online games streaming media programகள், internet போன்சர்வீச்ஸ், பிட் டாரண்ட் போன்ற downloading programகள் ஆகியவை அதிக அளவில் dataவினைக் கையாளுவதால், network band அளவில் அதிக இடத்தை எடுத்துக் கொள்கின்றன. எனவே இவற்றைத் தேவைப்படும்போது மட்டும் இயக்கி மற்ற நேரத்தில் இயங்கா நிலையில் வைத்திட வேண்டும்.

Hard drive ஒன்றை, அது உள்ளே இணைப்பதாயினும் அல்லது வெளியே வைத்து இயக்குவதாயினும், தேர்ந்தெடுக்கையில் அதன் இயக்க வேகம் அதிக பட்சம் இருக்கும் வகையில் பார்த்துக் கொள்ளவும். உள்ளே வைத்து இயக்கும் internal drive மற்றும் வெளியே வைத்து, இணைத்து இயக்கும் external drive என இரு வ்கைகள் தற்போது அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

வெளியில் வைத்து பயன்படுத்தும் disk driveகளில் பல நன்மைகள் உண்டு. உங்கள் data வினை நீங்களே பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம். data backup செய்வதற்கு பாதுகாப்பானதாகும். உள்ளிருந்து இயக்கக் கூடிய டிஸ்க்குகளில் sata வகை இணைப்புகள் சிறந்தவை ஆகும். அடுத்ததாக esata எனச் சொல்லப்படும் வேகம் கொண்டவை, யு.எஸ்.பி அல்லது பயர்வேர் டிரைவ்களைக் காட்டிலும் வேகம் கொண்டவையாகும். ஆனால் இவற்றைப் பயன்படுத்த ஒரு add-on card தேவைப்படும் தற்போது 7,200 rpm வேகத்திற்குக் குறைவாக எந்த hard diskம் இயக்குவதில்லை. *10,000 மற்றும் 15,000* rpm வேக driveகள் கிடைக்கின்றன. ஆனால் சற்று கூடுதலாகப் பணம் கொடுத்து வாங்க வேண்டியிருக்கும். தற்போது அறிமுகமாகிப் பரவி வரும் solid state disk, கம்ப்யூட்டர் பயன்பாட்டிற்கு அதிக வேகம் தரும். ஆனால் இவை இன்னும் குறைவான விலையில் கிடைப்பதில்லை.

கம்ப்யூட்டர் செயல்படும் வேகத்தினை printerகளும் தாமதப்படுத்துகின்றன. அச்சின் தன்மையைச் சற்றுக் குறைவாக வைத்துக் கொண்டால், கம்ப்யூட்டரின் செயல்பாடு வேகம் அதிகரிப்பதோடு, அச்சிடும் மையும் மிச்சப்படும்.

இணைய தளங்களை அச்சிடுகையில், அந்த பக்கத்தில் காணப்படும் விளம்பரங்கள், கிராபிக்ஸ் படங்கள் கம்ப்யூட்டரின் செயல்பாட்டினை மந்தப்படுத்தும். எனவே அந்த படங்கள் இல்லாமல் அச்சிடுவதே நல்லது.

Internet explorer நீங்கள் பயன்படுத்துவதாக இருந்தால், அதில் Tools, Internet Options தேர்ந்தெடுக்கவும். இந்த விண்டோவில் advanced tape கிளிக் செய்திடுக. பின் கிடைக்கும் விண்டோவில் multi media பிரிவிற்குச் செல்லவும். அதில் show pictures என்று இருப்பதன் எதிரே உள்ள பெட்டியில் இருக்கும் டிக் அடையாளத்தை எடுத்துவிடவும். Firebox browserல் Tools, Options தேர்ந்தெடுத்து, கிடைக்கும் விண்டோவில் content tapeல் கிளிக் செய்திடவும். Load Images Automatically என்று இருப்பதன் எதிரே உள்ள டிக் அடையாளத்தை நீக்கவும். இந்த இரண்டு பிரவுசர்களிலும் refresh பட்டனை அழுத்தி இணையப் பக்கங்களை படங்கள் இல்லாமல் இறங்கும்படி பெற்று, பின் print கட்டளை கொடுக்க வேண்டும். அச்சடித்து முடித்த பின் மீண்டும் மேலே காட்டியுள்ள இடங்களுக்குச் சென்று மீண்டும் கிராபிக்ஸ் படங்களைப் பெறுவதற்கான மாற்றங்களை ஏற்படுத்தவும். குறிப்பிட்டுள்ள வழிகள் அனைத்தும் கம்ப்யூட்டரின் செயல்பாட்டின் வேகம் குறைகையில் நாம் எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளாகும். இவற்றை ஓரிரு முறை எடுத்தால் மட்டும் போதாது. தொடர்ந்து அடிக்கடி இந்த செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வேகம் இழந்த கம்ப்யூட்டர் தொடர்ந்து பழைய கூடுதல் வேகத்தில் இயங்கும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இந்த முகவரியினூடாக அறிந்து கொள்ளலாம் http: //www.ehow.com/how_2170404_tune-up-computer-free-html.


– *கு. சிறிஜெயந்தன்* –
மட்டம் - 4
பொறியியல் பீடம்

தமிழே
நீ செம்மொழியாக இருந்தென்ன பயன்?
என் காதலை புரியவைக்க உன்னிடம்
ஒரு வார்த்தையும் இல்லையே?
- **நந்தன்**


*With Best Compliments From*



# RK & Sons Electronics



Dealers in all kind of Electronic & Gift Items etc...

T.V, Deck, DVD, CD Player, Radio, Dish T.V. Washing Machine, Fan, Fridge, Grinder, Cassette Recorder, Oven, Rice Cooker, etc ...

Main Street, Nelliady, T.P : 0775029034, 0775137255

# பேய்கள் சப்பிய குழந்தைகள்

சுவர்க்கத்தின் கதவை ஒருமுறை
தட்டிவிட்டு விழித்து நின்றேன்
அதற்குள் எனக்கு
அனுமதி கிடைத்து விட்டது
புரண்டெழுந்து புடைத்து நின்று
இரு தடவை என்னை நானே
அறைந்து கொண்டேன்
பாம்புகளை பிடித்து கைகளை
இறுகக் கட்டிக் கொண்டேன்
என்ன தான் நடக்கிறது பார்த்து விடுவோம்?
'சுவர்க்கம்' என போர்ட் மாட்டிய
நரகம் அது என்று புரிந்து கொள்ள
மாதங்கள் தேவைப்படவில்லை
நாட்களே மிக அதிகம்
கனவுகள் கனமாய் இருந்தன
என்னுடைய கடந்த காலத்தில்
'பனை மரத்தான்' என்றால்
ஊருக்குள் படு பிரப்ல்யம்
இப்படி ஏதேதோ காரணங்களால்
'நாம்' புறக்கணிக்கப்பட்டோம் 'நீங்கள்'
கல்விப் பரவலாக்கத்தின் கருணையால்
நீங்களும் நாங்களானோம்.

மூட்டை கட்டி அனுப்பி வைத்தனர்
அந்த மூட்டை இங்கே கட்டவிழ்க்கப்பட்டதும்
வெறும் கடைச்சரக்காகி கிடக்கின்றேன்
வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால்
ஏராளமாய் பெண் எடுக்கலாம்
தாராளமாய் பணம் கறக்கலாம்
ஏகப்பட்ட கற்பனைப் பூச்சிகள்
பறந்தன.

அவை பறந்த மாத்திரத்திலேயே சிறகொடிந்து
சிதைந்தன
நான் பெற்ற பட்டம் இங்கே பட்டம் விடக்கூட
பயனளிக்கவில்லை

சாப்பாட்டுக்கடையிலும் சலூன் கடையிலும்
கூப்பிட்டு வேலை தந்தாலும்
மறுக்கவா போகிறேன்?
அந்த கொடுப்பனவும் எனக்கில்லை.
என் தாய் அழகில்லை என்பதால்
அடுத்த வீட்டு ஆச்சி என்னைப்
பெற்றவளாகி விடுவாளா?
குந்த ஒரு குடி நிலமும் இங்கில்லை
எங்கள் ஊர்க் குழந்தைகளைப்
பேய்கள் சப்பியதாய்ச் சொல்லி
நட்சத்திரங்கள் என்மீது விழுந்தன
அதில் ஒன்றாவது
நாளை பற்றி நம்பிக்கை தருமோ?

*ச. நிராதன்*
மட்டம் - 4
பொறியியல் பீடம்


*With Best Compliments From*

**WESTERN UNION பணப் பரிமாற்றம்**
**கணேசா ஏஜென்சி**

உலகெங்கும் இருந்து பணத்தை பெற விரைவான வழி
No. 329 B பிரதான வீதி, பருத்தித்துறை
T.P : 021 2263928

*With Best Compliments From*

**நிதர்சன் கிறீம் கவுஸ்**



165/2, பஸ் நிலையம்,
பருத்திதுறை
T.P : 0774690228

# பல்கலைக்கழக வாழ்வும், தமிழர் கலாசாரமும்

ஒரு இனத்திற்கு கலாசாரம் என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். ஏன் ஒரு இனத்தை அல்லது ஒரு பரம்பரையை அல்லது ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டாலோ, அவர்களது உறவு, பண்பாடு, கலாசாரம் என்பன விட்டுக்கொடுக்க முடியாதவையாகும். இது கட்டிக்காத்து வளர்க்கப்படும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை முறையும் ஒரு கலாசாரம்தான் என எண்ணத் தோன்றும், ஒரு வகையில் உண்மையும் அதுதான்.

அதனால்தான் ஒரு இனமோ அல்லது நாடோ கலாசாரத்தால் பெருமை அடைகின்றது. இதனால் கலாசாரமானது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

சமூகத்தின் விழுமியங்களையும், கடப்பாடுகளையும் சுமந்து கொண்டு ஒரு இனத்தின் தனித்துவ அடையாளத்தை தன்னகத்தே கொண்டதுமான, தன்னிகரில்லா தமிழினத்தின் கலாசாரமும், பண்பாடும் சிந்துவெளி நாகரீகம் தொடக்கம் கோவை செம்மொழி மாநாடு வரை வியாபித்துக் கிடக்கின்றது என்பதை ஆதாரபூர்வமாகவும், ஆணித்தரமாகவும் எடுத்தியம்பும் போது எமது கலாசாரத்தின் தொன்மையும் அதன் வலிமையும் இலகுவாக அடையக்கூடியதாக உள்ளது.

வேறுபட்ட சமூகங்கள், இனங்கள் வேறுபட்ட கலாசார பண்பாட்டைக் கொண்டிருக்கின்ற போதும் தமிழர் கலாசாரத்திற்கு என்றுமே தனியான இடமுண்டு. இருந்தும் இன்றைய நவீன யுகத்திலே எமது கலாசாரம் படிப்படியாக சிதைவடைந்து வருவதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

''தோன்றில் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றிலும் தோன்றாமை நன்று'' எனும் வள்ளுவனின் திருக்குறளுக்கேற்ப, நாம் இந்த தரணியிலே பிறக்கின்றபொழுதும், நடைமுறைவாழ்க்கையின் போதும் புகழோடு இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. அன்றேல் இத்தரணியிலே தோன்றாமல் இருப்பது நன்று என்றும் இக்குறள் கூறுகின்றது. இன்றைய நவீன உலகத்திலே கலாசார சீர்கேட்டு பழக்க வழக்கங்கள் அதனோடு சார்ந்த நடவடிக்கைகளினால் புகழை இழந்தோர் ஏராளம். பண்டைய இதிகாசங்களுக்கேற்ப இராமயணத்திலே இராவணன் மாற்றான் (இராமன்) மனைவியை இச்சையின்றி கடத்தியதால் புகழை இழந்தமை, துரியோதனன் திரௌபதையின் துகிலை உரிந்ததால் அவனுடைய புகழை இழந்தமை நல்ல சான்றுகளாகும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கும், கலாசாரத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு காரணம் மக்களின் கலாசாரம் உள்நாட்டிலே சீர்கெடுவதற்கு பெரும்பாலும் இப்பல்கலைக்கழக மாணவர்கள் உறுதுணையாய் இருப்பது என்பது ஒரு யதார்த்தபூர்வமான உண்மையாகும். பல சிரமங்களுக்கு மத்தியிலே பதின்மூன்று வருடங்கள் பாடசாலைக்கல்வி கற்று, கல்விப் பொது தராதர பரீட்சையிலே சிறந்த முறையில் சித்தியடைந்து மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் மிகக்குறைவான விழுக்காடு பரீட்சாத்திகளுக்கு கிடைக்கின்ற ஓர்

உன்னதமான சந்தர்பமே பல்கலைக்கழக தெரிவாகும். குறிப்பிட்ட பல்கலைக்கழக மாணவர்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கைக்கான காரணங்களையும், அதன் நிமித்தம் ஏற்படும் கலாசார சீரழிவுகளையும் தனித்தனியாக பார்க்கின்ற போதே அதன் உண்மைத் தன்மையை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

பல்கலைக்கழகத்திற்கு உள் ஈங்கப்படும் தமிழ் மாணவர்கள் வெவ்வேறு இனத்தை சார்ந்த மாணவர்களின் கலாசார விழுமியங்களையும் அவர்களினுடைய நடை, உடை, பாவனை அத்தோடு பழக்கவழக்கங்களை அடையவோ அல்லது அநுபவிக்கவோ முயலுகின்றபொழுது கலாசாரம் சீரழிகின்றது. மேலும் இன்றைய யுகத்தின் போக்கிற்கேற்ப பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பாக பெண் மாணவர்கள் மனிதரின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான ''உடை'' அணியும் பாங்கானது ஒரு விதத்திலே மற்றவர்களை கவர்ச்சியின் பால் ஈர்த்தும், தாகமுடையவர்களின் தாகத்தினையும் தீர்க்கின்றதே தவிர, கலாசாரத்திற்கு எவ்விதமான பங்களிப்பையும் வழங்கவில்லை. மாறாக இவ்வாறான செயற்பாடுகள் தமிழர் கலாசாரத்தை மென்மேலும் படுகுழியில் தள்ளும் ஒரு நடவடிக்கையாகவே அமைகின்றது என்றால் அது ஒரு ஆணித்தரமான கண்கூடு.

மேலும் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை எனும் பெயரிலே சிரேஷ்ட மாணவர்கள், இளைய மாணவர்களை பகிடிக்காக வதைக்கின்றபொழுது பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள், இச்சையின்றிய பாலியல் சேட்டைகள் என்பனவும் எமது இன கலாசார சீரழிவிற்கு மேலும் வழிகோலுகின்றது பகிடிவதை காலத்தில் புனைப்பெயர் சூட்டி பகிடி செய்தல் அல்லது வெவ்வேறு பாலினையுடைய மாணவர்கள் நெருங்கிப் பழகுதல் நீண்ட காலப்போக்கிலே அவர்கள் பிழையான திசையில் போக வாய்ப்பாக அமைகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களை இளைய மாணவர்கள் ஒரு வரப்பிரசாதமாக் பயன்படுத்துவது பல்கலைக்கழகங்களில் இயல்பானதே. எனினும் அவ்வாறான இணைப்புக்கள் பொது இடங்களிலும், அத்தோடு பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயும் அருவருக்கத்தக்க இச்சை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பது, பெரும்பான்மை, வெள்ளை இனத்தவர்களின் கலாசாரத்தோடு எம்மை நெருங்க வைத்து எமது கலாசார பண்பாடுகளை மீறுகின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலைக்கு வழிகோலுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் நெருங்கி வாழ்வதால் துப்பரவின்மை நோய்கள், தீய கெட்ட பழக்கங்களைப் பழகுதல், சமய நம்பிக்கையின்மை, உறவினரைப் பிரிந்து வாழ்வதால் ஏற்படும் மன உளைச்சல்கள் போராடத் தூண்டும் செயல்கள் ஆகியவற்றாலும் கலாசாரம் சீர்கெடுவது கண்கூடு

பல மாணவர்கள் போதிய நிதியுதவியின்றி அவர்களது பல்கலைக்கழக கல்வியை பலசிரமங்களுக்கு மத்தியிலே தொடர்கின்ற பொழுது, ஒரு சில மாணவர்கள் கைக்கு மீறிய வகையிலே சூதாட்ட நிகழ்வுகளிலும், களியாட்ட நிகழ்வுகளிலும் தங்களது பணத்தை செலவழிக்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகளினால் எமது கலாசாரம் ஏதோ ஒரு வகையிலே பாதிக்கப்படுகின்றது என்பதும் உண்மையானதே.

பல்கலைக்கழக வாழ்க்கையை முடித்துவிட்டு உயர் வருமானத்திற்காய் தொழில்தேடி வெளிநாட்டுக்கு புலம் பெயர்ந்து செல்பவர்களும் அத்தோடு வெளிநாடுகளுக்கு உயர் கல்விக்காய் செல்பவர்களும், ஏதோ ஒரு வகையில் கலாசார சீரழிவிற்கு உறுதுணையாய் அமைகின்றனர். இதற்கான மூல காரணம் இவர்கள் தம் சொந்தக் கலாசாரத்தை கைவிட்டு அந்நிய கலாசாரத்தை பின்பற்ற வேண்டிய நிர்பந்தங்களே.

இது தவிர பொருளாதார மேம்பாட்டிற்காகச் செல்பவர்கள் அங்குள்ள கலாசார பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி மீண்டும் நாடு திரும்பி அவற்றையே பின்பற்றுவதால் கலாசார சீரழிவுகள் எற்படுகின்றன. ஏன் ''எயிட்ஸ்'' போன்ற உயிர் கொல்லி நோய்கள் கூட ஏற்படுகின்றன.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர் சமுதாயத்தினால் ஏற்படும் கலாசார சீரழிவுகள் ஏராளம். ஆயினும் எமது நாட்டிற்குள்ளேயே அடிப்படை வசதிகளின்றி, கல்வியறிவின்றி யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்த, நாதியற்ற மக்களின் ஒரு பகுதியினர் எவ்வித வேலைவாய்ப்பின்றி நாடோடிகளாக, முகவரியற்றவர்களாக திரிகின்றனர். இவர்களின் இப்பரிதாப நிலை பற்றி அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தீர்க்கமான ஒரு முடிவினை எடுத்து செயற்படாதவிடத்து அதன் தாக்கம் மிக மோசமானதாகவே அமையும் ஆகவே இத்தகைய கலாசார சீர்கேடுகளைத் தடுக்க அறிவியலாளர்கள், புத்திஜீவிகள், சமயப் பெரியார்கள் முன்வந்து ஏற்ற செயற்றிட்டங்களையோ வசதிகளையோ செய்து கொடுத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

– ஆ. பகீரதன் –
மட்டம் - 4
பொறியியல் பீடம்

ஒட்டடைகளை அகற்றுகிறீர்கள் - நீங்கள்
அதற்குள் தான் வாழ்கிறேன் - நான் சிலந்தி
- கார்த்தி

*With Best Compliments From*

**Arrul Global Express கூரியர் சேவை**

கொழும்பு மற்றும் சகல நாடுகளுக்குமான பொதிகள் ஆவணங்கள்

*வெளிநாடுகளுக்கு 5 நாட்களிலும் கொழும்பிற்கு மறுநாளிலும் ஒப்படைக்கப்படும்*

01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்

Tel : 0212226113

*With Best Compliments From*

# திருகோணமலை இரசாயனவியல் சங்கம்

## சங்கம் சஞ்சிகை

சிறப்புற வாழ்த்துகிறது

*With Best Compliments From*

# MARUTHY ELECTRICALS

WHOLE SALE & RETAIL

Dealers in all kind of Electrical Goods & Accessories

229, Main Street, Trincomalee.
T.P : 026 2221308

*With Best Compliments From*

# NEW CITY
# JEWELLERS

No. 176, North Coast Road, Trincomalee.
T.P : 0262221445, Fax : 0262227331, Mobile : 0777697069
E-mail : ncity176@yahoo.co.in

*With Best Compliments From*

# BATA WORLD

178, Ehamparam Road, Trincomalee.
T.P : 0262225233

# நிரந்தரமாக்கப்பட்ட தொலைவு

மனித வாழ்வில் மகிழ்ச்சி மட்டுமே
மலர்ந்திருக்கும் மழலை பருவம்.....

விளையாடும் சிறு பொம்மையை
தொலைத்துவிட்டு....
எத்தனை முறை அழுதிருப்பாய்?
நானும் கூட தொலைத்துவிட்டேன்....
கூடி... ஆடி ஓடிய
தோழிகள் பலரை....

விடுமுறை வந்துவிட்டால்
குடும்பத்துடன் வெளியூர் சுற்றுலா
பற்பல கண்டிருப்பாய்....
நானும் கூட
விடுமுறை நாட்கள் மட்டுமல்ல...
பலநாள் பாத யாத்திரையாக
தூர தேச பயணம்....

பஞ்சு மெத்தையின் சுகத்தில்...
AC கொடுத்த இதத்தில்..
அன்னை, தந்தை தந்த அணைப்பில்...
உன் உறக்கம்...
எனக்கு மட்டும் என்ன?
அன்னையின் பொன் மடியில்...
இயற்கை அள்ளி வீசும் AC யில்..
அன்னை தந்தை இருவர் துயிலையும் சேர்த்து...
நான் மட்டுமே உறங்குவேன்.

பட்டாம் பூச்சியாய் இன்பவானில்
சிறகடிக்கும் என் சிறுவயது
சிறகிழந்த பறவையாய் இன்னல் வானில்
சிதறடிக்கப்பட்டது...
நிரந்தரமாக்கப்பட்டது
என் இன்பத்தின் தொலைவு....

– பா. சுவேதா –
மட்டம் - 3
பொறியியல் பீடம்

*With Best Compliments From*

# துஷா

இலவச கண்
பரிசோதனை நிலையம்

## பல் மூக்குக்கண்ணாடியகம்


**கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்**

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், T.P : 0212223461, 0777150032

*With Best Compliments From*



# சண் சிற்றி



518, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**சகலவிதமான மருந்து வகைகள், பால்மா வகைகள்,**
**சிறுவர்களுக்கான பொருட்கள் விற்பனையாளர்கள்**

T.P : 021 222 3720, 0779152359

*With Best Compliments From*

*Medical and Poultry Items etc.....*

# ARVEGIE Medicals

## ஆர்வீஜி மருந்தகம்

504, Hospital Road, Jaffna
T.P : 021 222 2129

*With Best Compliments From*

# யாழகம்

# YARLAKAM

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், T.P : 0212225563

# தற்கால இசையமைப்பாளர்கள் - சிறுபார்வை

இப்போதைய காலப்பகுதியில் வெளிவரும் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கும் தென்னிந்திய தமிழ் சினிமாவில் உள்ள சில முக்கிய இசையமைப்பாளர்களை பற்றி ஒரு சிறு அலசலை, எனது பர்வையை தர இக்கட்டுரை முயல்கிறது. சின்ன வயசிலிருந்து ஒவ்வோர் பாடலை கேட்கின்றபோதும் அதை யார் பாடியவர்கள், யார் இசையமைத்தவர் என்று அவர்களது பின்னணி பற்றி அறிந்து கொள்வதில் நான் காட்டிய ஆர்வம் இதை எழுத என்னை தூண்டியது. முதல் இரு இடங்களை பிடித்து முன்னணியில் இருக்கும் இசையமைப்பாளர்களான A.R.Rahman மற்றும் ஹாரிஷ் ஜெயராஜ் பற்றி ஏலவே அனைவருக்கும் பரீட்சயம் என்பதால் அவர்களை தவிர்த்து ஏனைய சிலரை பார்ப்போம்.

**யுவன் சங்கர்ராஜா**

மிக இளவயதில் (16) திரைத்துறைக்கு நுழைந்து பல இளவட்டங்களின் விருப்பத்திற்குரிய இசையமைப்பாளராக இருக்கும் இவர், எனது கணிப்பின்படி திறமை அடிப்படையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். இளையராஜாவின் வாரிசாகவே திரைத்துறைக்கு அறிமுகமானாலும் தனது திறமையால், முயற்சியால் படிப்பாக உயர்ந்து உச்ச நிலையை அடைந்துள்ளார். கைவசம் கூடுதலான படவாய்ப்புக்களை கொண்டவர்கள் வரிசையில் முதலிடத்திலிருக்கும் யுவன் தற்கால இளைஞர், யுவதிகளுக்கு பிடித்தவகையில் இசையமைப்பதில் கைதேர்ந்தவர். ஆனால்தான் கூடுதலான இளவட்டங்கள் இவரின் ரசிகர்கள். 'அரவிந்தன்' திரைப்படத்துடன் சறுக்கலாக 1996ல் ஆரம்பமான இசைப்பயணம் 1999ல் வெளிவந்த 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்படம் மூலமாக முற்றிலும் மாறியது. இதில் இடம் பெற்ற அனைத்துப்பாடல்களும் சூப்பர் ஹிட்டானதை தொடர்ந்து வாய்ப்புகள் குவியலானது. '7G Rainbow Colony', 'காதல் கொண்டேன்' இவரது இசையில் வெளியான Box office Hit திரை அல்பங்களாகும். அண்மையில் வெளியான 'பையா பாடல்களும் சந்து பொந்தெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இசையமைப்பதில் மட்டுமல்லாது தனது சொந்தக்குரலில் Stylish ஆக பாடவல்ல திறமைபடைத்த இவரது சொந்தக்குரல் பாடல்கள் எல்லாம் பாரிய வெற்றியை பெற்றுள்ளது.

**G.V பிரகாஷ்குமார்**

இப்போதுள்ள இசையமைப்பாளர்களில் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி பயணித்து கொண்டிருக்கும் திறமை வாய்ந்த இசையமைப்பாளர்கள் வரிசையில் GVற்குதான் எனது பார்வையில் முதல் இடம். திரைத்துறைக்கு செல்வாக்கால் சுலபமாக இளவயதில் (19) நுழைந்தவராக பார்க்கப்படுகின்ற போதிலும் குறுகிய காலத்தில் பலர் மத்தியில் பிரபலமடைந்தவராக இருக்கிறார் GVபிரகாஷ். Mozart of Madras என செல்லமாக அழைக்கப்படும் A.R.Rahman னின் மருமகனான இவர் மிகவும் சிறுவயதிலேயே பல பாடல்களை மாமனின் இசையில் பாடியுள்ளார். 'வெயில்' மூலமாக பலரும் வியக்கும் வகையில் தனது அறிமுகத்தை ஆணித்தரமாக பதித்தார். வேற்றுமொழிகளில் உள்ள முன்னணி பாடகர்கள் பலரை தனது இசையில் பயன்படுத்தும் இயல்பை கொண்டவர். இவர் பயன்படத்திய பிறமொழிபாடகர்களாக கைலாஷ்கர், அல்க்னா யாக்கீட், சோனுநிகம், டலர் மெஹந்தி, ரூப்குமார் ரதோட் போன்றோரை குறிப்பிடலாம். ரஜினியின் 'குசேலன்' படத்தில் இசையமைக்க கிடைத்த வாய்ப்பானது இவரது திறமைக்கு கிடைத்த அங்கீகாரமாகும். Remake பாடல்களுக்கு இசையமைக்ககூடாது என்ற கொள்கையை கொண்ட

இவர், இயக்குனரின் வேண்டுகோளிற்கு பணிந்தே 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் 'அதோ அந்த பறவை' பாடலை Remake செய்யாது Original பாடலின் Sound track ற்கு மேலதிகமாக இசைச்சேர்க்கை செய்து பழைய பாடலின் சிறப்பு மங்காது தனது இசையால் அந்த பாடலை மெருகேற்றினார். பின்னணி இசையில் இவரது தேர்ச்சியை 'ஆயிரத்தில் ஒருவன்' படம் மூலம் நீங்கள் உணரலாம். A.R.Rahman னின் சாயலில் அல்லது அவரது மெட்டுக்கள் சிலவற்றை இவர் சுட்டு பயன்படுத்துவதாகவும், சில ஆங்கில பாடல்களை ஆட்டையை போடுவதாகவும் இவரை சிலர் குறை கூறுவது மறுக்கமுடியாத உண்மையாகும். பாடகராகவும் விளங்கும் இவர் ஹாரிஷ் ஜெயராஜ் இசையில் கிட்டத்தட்ட 5 பாடல்கள் வரை பாடியுள்ளர். யுவன் சங்கர்ராஜாவின் நேரடி போட்டியாளராக இவரை கருதலாம்.

**விஜய் அன்ரனி**

யாருடைய செல்வாக்குமின்றி திரைத்துறைக்கு நுழைந்தவர்களில் இவரும் ஒருவர் குத்துப்பாட்டுக்களின் தனிக்காட்டு ராஜாவாக திகழும் இவரது இசையில் முதலாவதாக 'சுக்ரன்' படப்பாடல்கள் வெளியாகியது. அந்தகாலத்தில் 'Suppose'பாடலை வாயில் முணுமுணுக்காதவர்களே கிடையாது. முதல் அல்பம் மூலமாக தனெக்கென தனிமுத்திரையை பதித்த விஜய் அன்ரனி பல புதிய இளைய பாடகர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இவரது இசையில் வெளிவரும் படங்களில் ஒரு குத்துப்பாடலாவது இருப்பது தவிர்க்க முடியாதவொன்று. 'நாக்க முக்க' பாடல் இவரது fast beat பாடல்களில் ஒரு மைல்கல்லாகும். இப்படியான பாடல்களுக்கு பாடலை எழுதுவதும் இவரே. 'சுக்ரன்', 'டிஷ்யும்', 'நான் அவனில்லை', 'நினைத்தாலே இனிக்கும்' இவரது இசையில வெளியாகிய பலராலும் பேசப்பட்டபாடல்கள். குத்துப்பாடல் மட்டுமல்லாது இவரது மெலடி பாடல்களும் மிகவும் இனிமையானவை, தனித்தன்மையானவை. 'அங்காடித்தெரு' படத்தில் 'அவள் அப்படி ஒன்றும்' படம் அதற்கு மிகச்சிறந்த எடுத்தக்காட்டு.

**இமான்**

சிறந்த Remake இசையமைப்பாளராக என்னால் பார்க்கப்படும் இசையமைப்பாளராக இமான் காணப்படுகிறார். இவரது பாடல்களை கேட்கும் இசையறிவுள்ள எவரும் இது இமானுடையதென்று இலகுவாக கண்டுபிடிக்கலாம். ஏனெனில் ஒரே ஸ்டைலில் வழமையான instruments களை பயன்படுத்தியே இவர் இசையமைக்கிறார். பெரும்பாலும் வர்த்தகரீதியான மசாலா படங்களுக்கே இவருக்கு வாய்ப்புக்கள் கூடுதலாக கிடைக்கிறது. விஜயின் 'தமிழன்' படத்தில் இசையமைப்பாளராக இவர் அறிமுகமானார். சொந்த குரலில் நெளிவு, சுளிவுகளுடன் பாடல்களை பாடுவதில் இமான் வல்லவர். இவரும் பல புதுமுகங்களை தனது இசை மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார். இமானின் பாடல்கள் ஒரு போதும் சகிக்க முடியாமல் இருக்காது (சிறிகாந் தேவாவின் தற்போதைய பாடல்கள் போல்) என்று அறியப்படும் Minimum guaranty இசையமைப்பாளர் இவர்.

**ஜேம்ஸ் வசந்தன்**

Vijay Tv, Sun Tv களிலும் பணிபுரிந்திருந்தாலும், இவரை நான் முதலில் கண்டது பொதிகை Tvயிலாகும். ஆரம்பகால பொதிகை Tvஐ பார்த்தவராயின் நீங்களும் நிச்சயம் இவரை கண்டிருப்பீர்கள். தொலைக்காட்சி அறிவிப்பாளராக அறியப்பட்ட ஜேம்ஸ் 2008ல் இவரது மாணவரான சசிக்குமாரால் 'சுப்பிரமணியபுரம்'ற்கு இசையமைக்க அழைக்கப்பட்டார். இந்தப்படத்தில் இடம் பெற்ற 'கண்கள் இரண்டால்' பாடல் மூலமாகவும், படத்தின் பெருவெற்றியின் மூலமாகவும் உலகம் பூராகவும் இவரது பெயர் பேசப்பட்டது. இவரது

எழுச்சி அதன்பின் திரையிசைப்பக்கமாக மாறியது. இவரின் இசையில் வெளியான 4 படப்பாடல்களும் இனிமையானவையாகும். எனது தெரிவில் இவரது அல்பங்களில் 'யாதுமாகி' முதல் இடம் பெறுகிறது. எனினும் படத்தின் சொதப்பலாலேயோ என்னவோ இப்படப்பாடல்கள் வானொலியில் ஒலித்து நான் கேட்டது மிகக்குறைவு. 4 படங்களிலும் ஒவ்வோர் Maximum Duet Melody பாடல் இருக்கின்றமை சிறப்பாகும்.

**வித்தியாசாகர்**

தற்காலத்தில் இசையமைத்துக் கொண்டிருக்கும் மூத்த இசையமைப்பாளர்களில் வித்தியாசாகர் முதன்மையானவர். இப்போதும் திறமையாக இசையமைத்துவரும் இவருக்கு வாய்ப்புக்கள் தற்போது குறைவாகியுள்ளமைக்கான சரியான காரணத்தை என்னால் அறிய முடியாதுள்ளது. தற்போதைய முதல்தர நடிகர்கள் அனைவரின் படங்களுக்கும் இசை வழங்கிய பெருமையுடைய இவர் ஆரம்ப காலங்களில் தனது இசையில் பாடல்களை பாடியும் வந்துள்ளார். அண்மையில் குருவியில் இடம்பெற்ற 'பலானது' பாடலை பாடியவரும் இவரே. S.P. பாலசுப்பிரமணியம், இளைராஜாவிற்கு அடுத்த சிறந்த இசையமைப்பாளராக இவரை தான் கருதுவதாக பல பேட்டிகளில் கூறியுள்ளார். 1989 இலேயே தமிழில் அறிமுகமாகியிருந்தாலும் கர்ணா படத்தில் 'மலரே மௌனமா' பாடல் மூலமாகவே தனது இருப்பை வெளி உலகிற்கு உணர்த்தினார். எனினும் 2001ற்கு பிறகே ஸ்திரமாக தமிழ்மொழிப்படங்களில் இவரால் கால் பதிக்க முடிந்தது. 'அன்பே சிவம்', 'கில்லி', 'சந்திரமுகி', 'மொழி', 'பிரிவோம் சந்திப்போம்' போன்ற படங்கள் இவரது புலமையை எடுத்தியம்பும் ஒரு சில படங்கள். பாடகர் மதுபாலகிருஷ்ணரை தனது ஆஸ்தான பாடகராக உபயோகிக்கிறார்.

**தேவிசிறி பிரசாத் (DSP)**

மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்ற இசை இயக்குனராக .விளங்கும் DSP தனது அறிமுகத்தை தெலுங்கு படத்திலேயே மேற்கொண்டார். 'ICE' மூலம் தமிழில் அறிமுகமானாலும் 'மாயாவி' படத்தின் மூலமாகவே தமிழில் பேசப்பட்டார். அரைச்ச மாவையே திருப்பி திருப்பி அரைக்கும் ஒரு கம்போஸராகவும், மேடை நிகழ்ச்சிகளுக்கே (Stage Performer) லாயக்கானவராகவும் இவரை நான் பார்க்கிறேன். (நல்லா டான்ஸ் பண்ணுவார்). அதாவது இசைச்சரக்கு தீர்ந்துவிட்டது இவருக்கு. இவரது இசையில் தற்போது வரும் பாடல்கள் அனேகமானவை இவரின் பழைய பாடல்களை ஞாபகப்படுத்தும். ஆனால் DSPக்கு படவாய்ப்புக்கள் குறைவில்லை. ஏனோ தெரியவில்லை. எனினும் 'கந்தசாமி' பாடல்கள் இதிலிருந்து மாறுபட்டவை. 'மாயாவி' 'ஆறு', 'உனக்கும் எனக்கும்' போன்றன இவரின் இசையில் பிரபலமானவை.

ஜோஷ்வாசிறீதர், தீனா, தரன், தமன் போன்ற இசையமைப்பாளர் பற்றியும் எழுதத்தான் வந்தேன். ஆனால் இப்பவே அலுப்படிக்கின்றது என்று சொல்வது கேட்கிறது. இவ்வளவும் காணும் நிற்பாட்டுகிறேன். மேலதிக தகவல்களுக்கு எனது வலைப்பக்கத்திற்கு செல்லுங்கள். (Gapல என்ர Blogற்கும் ஒரு Ad ஐ கொடுத்தாச்சு).

*– கார்த்தி –*
மட்டம் - 4
பொறியியல் பீடம்

# தொழில் முறைக் கல்வி

கல்வி என்பது வெறுமனே புத்தகத்தை படித்து பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்காக மட்டுமல்லாமல் எதிர்கால வாழ்க்கைக்கு பயனுடையதாக இருக்க வேண்டும் ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்பார்கள். எனவே எமது கல்வியானது ஏட்டு சுரைக்காய் போல இருக்கக் கூடாது. அனேகமாக அனைவரும் கல்வி என்பதைப் பற்றி தவறாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

''எதிர்காலத்தில் நிறைய சம்பளம் கிடைக்கும் ஒரு வேலையை வாங்கிக் கொடுக்கும் பட்டப்படிப்புதான் கல்வி'' என்று பெரும்பாலானோர் தவறாகக் கருதுகின்றனர். ''உலக அளவிலும், தேசிய அளவிலும், மாநில அளவிலும் வழங்கும் பரிசுகளைப் பெற்றவன்தான் சிறந்த கல்விமான்'' என நிறைய பேர் தவறாக கருதுகின்றனர். தனது பெயர் என்றும் நிலைத்து நிற்கும் வகையில் பெரிய சாதனைகளைப் படைத்தவர்களையும், புதுமைகளை செய்தவர்களையும் தான் கல்வி பெற்றவன் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்வதையும் நாம் காண்கிறோம். ஆனால் அவை அனைத்தும் உண்மையான கல்வி அல்ல, சுயநலத்தையும் சுய இலாபத்தையும், சுய இன்பத்தையும் சுய விளம்பரத்தையும் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருபவன் பெரிய பதவி வகித்து வந்தபோதிலும் அல்லது பெரிய செல்வந்தனாக இருந்த போதிலும் கல்வி பெற்றவன் என்று கூறுவது தவறாகும். அனைத்தையும் அபகரித்துக் கொண்டு தானும் தன் குடும்பமும் அமோகமாக வாழ வேண்டும் என்று நினைப்பவன் முழு நீளம் போட்டுக் கொள்ளும் அளவிற்கு பட்டப்படிப்பை படித்திருந்த போதிலும் கல்வி பயின்றவர்கள் பட்டியலில் இடம் பெறமுடியாது.

சரியான கல்வி, மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களை சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தருகிறது. அது 'மனிதர்களிடையே அன்பை அடிப்படையாகக் கொண்ட நல்லுறவை வளர்க்கிறது. கல்வி அறிவை வளர்த்துக் கொள்ளாதவர்கள்தான் நாடு, மதம், மொழி, இனம், ஜாதி போன்றவற்றின் அடிப்படையில் மனித இனத்தை நிறைய துண்டுகளாக சிதறடித்து, தங்களுடைய முக்கியத்துவத்தையும் சௌகரியங்கள் நிறைந்த வாழ்க்கையையும் நிலைநிறுத்திக் கொள்வதற்காக மனிதப் பிரிவுகளிடையே பிளவுகளை உருவாக்கி மோதல்கள் ஏற்படும்படி நடந்து கொள்வார்கள்.

எனவே எமது கல்வியறிவானது வாழ்க்கைக்கு பயன்படும் தொழில் முன்னிலைக் கல்வியாக இருக்க வேண்டுமே தவிர வெறுமனே புத்தகப் படிப்பாகவோ அல்லது எங்கள் சுயலாபத்தையும், இன்பத்தையும் ஈட்டித்தரும் புத்தகப்படிப்பாக இருக்கக் கூடாது. நவீன பாடத்திட்டத்தில் கொண்டுவரப்பட்ட தொழில் முன்னிலை கல்வியானது இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவராலேயே கூறப்பட்டிருக்கிறது, குறள் என்பது ஏதோ ''அறம் போதிக்கும் புத்தகம், இனிவரும் சம தர்ம சமுதாயத்திற்கு அது உதவாது'' என்று கருதுகின்றனர் சிலர். இது தவறான கருத்து.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' என்று கூறுகின்றார் வள்ளுவர்

தொழிலின் முன்னிலைக்கு இன்றியமையாது இயற்கை வளம். இயற்கை வளம் ஒரு பாடம் கட்டாயமாக உள்ளது நாட்டின் இயற்கை வளத்தை அறிந்து ப்பினால் அதைப்பெருக்கி வாழ வேண்டும் என்பதே இப்பாடத்தின் நோக்கம

அபிவிருத்திக்கு இயற்கை வளத்தைப் பற்றிய அறிவு மட்டும் போதாது. பின்னர் அவ்வளத்தை வாழ்விற்கேற்றவகையில் பயன்படுத்தும் பயிற்சியும் வேண்டும் நாடு என்பது குடும்பம் போன்றது. குடிமை என்பதன் பொருளே நாட்டிற்கு நல்லவனாக அமைதல் என்பதாகும். இந்நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் குடும்பம் போன்றவர்கள். இங்கு வாழ்வோர் இங்குள்ள வளத்தைப் பெருக்கி அதில் வரும் வருமானத்தோடு நிறைவு பெற்று வாழப்பழக வேண்டும். ஒரு குடும்பத்தை நடத்தும் இல்லத்தரசி வளக்கத்தாள் ஆக வளர வேண்டும். அதாவது குடும்பச் செலவை குடும்பத்தின் வருவாய்க்குத்தக்கதாக அமைக்கப்பழக வேண்டும். ஓர் இல்லத்தை பரிபாலனம் செய்யும் பெண்ணுக்கு இது முதல் இலக்கணம். அது போலவே நாட்டு மக்களும் நாம் உற்பத்தியாக்கும் செல்வத்தோடு மன நிறைவு பெற்று வாழப் பழக வேண்டும் ''தெளிந்த நீர்போல் சமைத்த கூழே ஆயினும் முயற்சியால் கிடைத்ததை உண்பதை விட இனிமையானது வேறொன்றும் இல்லை.'' என்பது வள்ளுவர் மொழி.

நாடு ஒரு குடும்பம். நாடு என்றால் என்ன? அதை எப்படி அமைக்க வேண்டும்? ''நாடென்ப நாடா வளத்தன''. நாம் ஒரு நாட்டில் இருக்கின்றோம் என்றால், அந்நாடு பிறநாடுகளை எதற்கும் எதிர்பார்க்காத தொழில்வளம் உடையதாய் இருத்தல் வேண்டும். பிற நாடுகளிடம் இருந்து ஏதோ பெறவேண்டிய நிலையில் நாம் இருந்தால் நம்மை நம் நாட்டினத்தவர் என்று சொல்லக்கூடிய பெருமையற்றவராவோம். ''நாடல்ல நாட வளந்தரு நாடு'' என்கிறார் வள்ளுவர். நாடவேண்டி வந்தாலும் மேற்கூறியவாறு இருந்து கடன்பட்டு வாழாது, மூலப்பொருட்களை விலைக்கு வாங்கி அவற்றிலிருந்து உற்பத்தி செய்யக்கூடியதாய் நம் நாட்டின் கல்வி வளம் இருக்க வேண்டும். இத்தகைய ஒரு நாட்டை அமைப்பது நல்ல குடிமக்களின் கடமையாகும் நல்ல குடிமக்களைத் தோற்றுவிப்பது முறையான கல்வியின் நோக்கமாகும். ''ஆய்வினையும் ஆன்ற அறிவும்'' என்பது போல இரண்டு திறமையும் உடையவர்களே சிறந்த குடிமகன் ஆவார்.

தொழில் முன்னிலைக்கல்வி ஏன் பெறும் கொள்கையறிவு செயலாற்றலை ஒருவருக்கு தராது? செய்யும் வழிகளை அறிந்து, இடையூறுகளைத் தாங்கிச் செய்து முடிக்க வல்லனம் அல்லாமல், மற்றவனைச் சிறந்தவன் என்று கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக்கூடாது என்கிறார் வள்ளுவர். உடலால் வினை செய்து பயிற்சி பெற்றவருக்குத் தான் அறிவைச் செயலாக்கும் திறமை எத்துறையிலும் உண்டாகும். இதைத் தீர்மானிக்கும் ஒரு திட்டமே தொழில் முன்னிலைக் கல்வி. வளம் பெருக்குவதற்கும், பரிபாலத்திற்கும் ஏற்ற அறிவு வேண்டும். அவரவர் இயல்பு அறிந்துதான் உயர் படிப்பு, வேலையும் கொடுத்தல் வேண்டும்.

ஒருவர் செய்யும் கருமத் தொகுதியே அவர் வாழ்க்கைத் தொழில் இந்த வாழ் தொழிலை பயிற்றுவிப்பதுதான் கல்வி. கமம், மர வேலை, உலை வேலை, நெசவு, வர்த்தகம் போன்ற எல்லாத் தொழில் நிலமைகளும் வாழ் தொழிலைச் செம்மைப்படுத்தவேயாம் இத்தகைய ஒரு செம்மையை இனிய நிலைக் கல்வி நமக்குத் தரவேண்டும் மற்றும் தேவையற்றதை விட்டு குறைவிலாது மக்கள் வாழ வேண்டியதற்கான கல்வியை கற்க வேண்டும். ''நிற்க அதற்குத் தக''. இது தான் பெரிய அரிய தொழில் முன்னிலைக் கல்வி தக நிற்காவிட்டால் சில்லறைத் தொழிலின் முன்னிலைக் கல்வி சிதறிப்போய்விடும். வாழும் தொழிலின் முன்னிலைக்கு வளந்தருவதே நல்ல கல்வி.

– ம. சஞ்ஜே –

மட்டம் 4

பொறியியல் பீடம்

# மனிதம்

உன் உள்ளக் கதவை
உரக்கத் தட்டிப்பார்
உன்னுள் மனிதம்
உணர்விழந்துவிட்டதா என்பதை

மானிடரின் அவலம் கண்டும்
அவதரிக்க வில்லையா? - மனிதம்
மனம்தானே - மனிதம்
மரித்துவிட்டதோ என்ன!

மனிதம் என்பதை உணர்ந்து கொள்
மகிழ்வாய் வாழக் கற்றுக் கொள்
பூவுலகில் பிறந்திட்ட
புனிதர்கள் நாம் என்று
புன்னகை சிந்திவிடு - மனிதா
புதுயுகம் படைத்து விடு

அன்பு அகிம்சை, நேர்மை
அதன் வழி நடந்திடு - நீ
மனிதம் என்பதை உணர்ந்துகொள்
மனதில் அதையே விதைத்திடு
மனிதா - நீ
அரவணைக்க வேண்டிய
அன்பு ஆயுதம் - மனிதம்

*வி. சுகிசன்*
மட்டம் - 4
பொறியியல் பீடம்

*With Best Compliments From*

**Harikanan Printers**

*General & Commercial Offset Printers, Screen Printers & Computer Designers*


424, K.K.S. Road, Jaffna, Sri Lanka. Tel : 0212222717, 0214590123
Fax : 0212222717, Website : harikanan.com

*With Best Compliments From*

# சங்கமம் நூல் இனிதே வெளிவர வாழ்த்தும்

# SUBA

## கல்வி நிறுவனம்



காரைநகர் சாலை, சித்தன்கேணி

*With Best Compliments From*

## சங்கமம் சஞ்சிகை
## சிறப்புற வெளிவர வாழ்த்துகின்றோம்

## பாரிஸ் மண்ணில் வெளிவரும்
## வலம்புரி - சங்குநாதம்



# பிளாஸ்டிக்கில் இருந்து பெட்ரோல்!

''பிளாஸ்டிக்'' நம் நவீன உலகத்தில் அனைத்தையும் பிரதியீடு செய்கின்றது. அதன் எண்ணற்ற நன்மைகளில் எளிதில் உருமாற்றமடையும் தன்மை நாள்தோறும் நம் வாழ்க்கையை எளிது படுத்துகின்றது. ஆனால் நாணயத்தின் இரு பக்கங்கள் போல நன்மைகளுடன் தீமைகளும் சேர்ந்தே வருகின்றது. பாவனையின் இறுதியில் அதை இயற்கைக்கு உகந்த வகையில் வெளியேற்ற இயலாமை ''பிளாஸ்டிக் யுகத்தின்'' பெரிய பின்னடைவாகும். மீள்பாவனை செய்யும் நடைமுறை தற்போது பிரபலமடைந்து வந்தாலும் பிளாஸ்டிக்கை மட்டும் தனித்து பிரித்தெடுக்கும் பணி கடினமானதும், நட்டத்தை ஈட்டக்கூடிய வழிமுறையாகவும் உள்ளது.

பிளாஸ்டிக்கின் கருயுகம் நாளுக்கு நாள் அதிகரிக்க ''கழிவு என்பது பிழையான இடத்தில் சரியான மூலவளம்'' என்பதை நிரூபிக்கும் வகையில் களுப்புமுல்ல, யடியந்தொட்டையை சேர்ந்த திரு ஆனந்த விதானகே எனும் இலங்கையர் கழிவு பிளாஸ்டிக்கை திரவிய எரிபொருளாக மற்றும் வழிமுறையை கண்டுபிடித்த அன்னார் பல இன்னல்களை தாண்டி இந்த Project Central Environmental Authority (CEA) க்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மொறட்டுவைப் பல்கலைக்கழக இரசாயனவியல் பீடம் இப் Project ஐ பரிசீலித்து அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்தது.

Lab scaleல் செய்யப்பட்டிருந்த இப்பரிசோதனையை திரு.விதானகே உடன் சேர்ந்து DCPE (Department of Chemical Process Engineering)> CEA ன் மூலதனத்துடன் Pilot Plantஐ வடிவமைத்து, அதை வெற்றிகரமாக Run பண்ணி கடந்த March 2010 ஊடகத்திற்கு வெளியிட்டது.

இது எவ்வாறு சாத்தியம்?

இங்கு மேற்கொள்ளப்படும் முக்கிய படிமுறைகள் மூலப்பொருளை பதப்படுத்தல் (Preparation) சிறு துண்டுகளாக உடைத்தல் (croshing), சிறுதுணிக்கைகளாக சிதைத்தல் (Cracking), Distimation கடைசியாகcondensation.

1. Raw Material Preparation

சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்துண்டுகளாக உடைக்கப்பட்டு hydraulic feeder மூலமாக reactor ற்கு செலுத்தப்படும்.

2. Cracking

இந்த பிளாஸ்டிக் ⟶ பெற்றோல் உருமாற்றத்தில் இந்த படி மிக முக்கியமானதாகும். இங்கு நீண்ட சங்கிலி மூலக்கூறுகள் (Long chain molecules) உடைக்கப்பட்டு குறுகிய சங்கிலி மூலக்கூறுகளாக (short chain molecules) மாற்றப்படுகின்றது. திரு. விதானகேயின் முக்கிய இரசாயன கலவை (Special Amalgam) இத்தாக்கத்தை ஊக்குவிக்கின்றது. இரு reactors உயர் வெப்பநிலையில் இத்தாக்கத்தை நடத்த துணைபுரிகின்றது.

3. Flash distillation

கலவையின் ஆவியாகும் தன்மை (Volatility)யை பயன்படுத்தி எமக்கு தேவையான பெற்றோலிய Fractionஐ பெற்றுக்கொள்ள முடியும். Solenold valves உதவியுடன் சடுதியான அமுக்க வேறுபாட்டை ஏற்படுத்துவதால் இது சாத்தியமாகிறது.

4. Product condensation

Flash distiMation ல் இருந்து வெளியேறும் ஆவி Shell & Tube heat exchangers மூலமாக ஒடுக்கப்படுகிறது (condensation)

தற்போதைய Plant ல் ஒரு நாளைக்கு 500 kg பிளாஸ்டிக் வரை பயன்படுத்தலாம். இதன் மூலம் 1000l பெற்றோலியம் கிடைக்கின்றது. 1ℓ Petrol ற்கான செலவு வெறும் 30Rs மட்டுமே! இதனால் பிளாஸ்டிக் பிரச்சினை தீர்வதுடன் எரிபொருளும் கிடைக்கின்றது.

இந்த இரசாயனவியலின் விந்தையால் இலங்கையர் மட்டுமல்லாது முழு உலகமே பயன்பெறலாம்.

*– பிரசாத் –*

மட்டம் - 4

பொறியியல் பீடம்


With Best Compliments From

ஸ்ரீ

வேழமுகன்

முகவர் அஞ்சலகம்



T.P : 0212263215

0212263019

நெல்லியடி

கரவெட்டி

# கர்நாடக இசையும் விஞ்ஞானமும்
# நேற்று, இன்று, நாளை

கற்றோரும் அது அற்றோரும் சற்றே அதிகமாய் மெச்சுகின்ற கர்நாடக சங்கீதத்தை நேற்று, இன்று, நாளை என்ற விஞ்ஞானத்தோடு ஒப்பிட்டு பார்த்து பூச்சி புழு கடிக்காமல் பாதுகாத்து பத்துமாதம் சுமக்கும் தாய் போன்று ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் போற்றப்பட்டும் நமது தாய்மொழியில் தொலைந்து போகாமல் பாதுகாத்தும் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பெரும் மலையில் சிறு துண்டை உடைத்து கர்நாடக இசையும் விஞ்ஞானமும் என்ற கோணத்தில் பின்னிப்பார்ப்போம்.

நேற்று - அன்றே இசை விஞ்ஞானத்தோடு ஓரளவு தொடர்பு கொண்டிருந்தாலும் அன்றைய விஞ்ஞான வளர்ச்சி சீராகவே இருந்து வந்தது. அன்றைய குழந்தைகளுக்கு தூக்க மருந்தாகவும், மன்னருக்கு வயிற்றுவலி போக்கிய சந்தர்ப்பங்கள் வாயிலாக கர்நாடக இசை ஒரு ''மருந்தாகவும்'' இருந்துள்ளது தெரியவருகின்றது. நஞ்சினை நீக்கிய மகிமையை திருநாவுக்கரசர் பதிகம் செய்தது என்றும், குறமகளின் பாட்டுக்கு மயங்கி மதயானை கட்டுப்பட்டு நின்றதையும் வரலாறு கூறுகிறது. மேலும் இறந்தவரை இசையால் உயிர்ப்பித்த நாயன்மார் வரலாறுகளையும் நாம் காணலாம்.

இன்று - இது நிரூபிக்கப்பட்ட ஒன்று. ஏனென்றால் மன அழுத்தம், மன இறுக்கம், மனஉளச்சல், மனவலி போன்ற மனநோய்களுக்கெல்லாம் நமது கர்நாடக இசையில் ராகங்கள் மருந்தாக அமைகின்றன என்று ஆராச்சியாளர்கள் இன்று நிரூபித்திருக்கிறார்கள். குரலிசைப் பயிற்சி செய்தால் குறட்டையிடும் பழக்கத்தை நீக்க முடிகிறது என டாக்டர் எலிசபெத் ஸ்காட் கூறுகிறார். கர்ப்பிணித் தாய்மார்கள் நல்ல இசையைக் கேட்பதன் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெறலாம் எனவும் விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன புல்லினங்கள் கூட செழித்து வளர இசை ஒரு ஊக்கியாக இருக்கிறது என்பதன் மூலம் இசை விஞ்ஞானத்துடன் கொண்டுள்ள தொடர்பு விளங்கும்.

நாளை - ''இசை மருத்துவமனைகள்'' என்று ஒன்று இயங்கினால் ஆச்சரியமில்லை. ஏனென்றால் மருத்துவத்துறையில் நாடி மருத்துவம், சித்த மருத்துவம், அலோபதி மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம், யோகா மருத்துவம் எனப் பல இயற்கை மருத்துவ மனைகள் இருக்கும் பொழுது நாளைய காலகட்டத்தில் இசை மருத்துவமனைகள் அமைவதன் மூலம் மனஉளச்சல், மன இறுக்கம் படபடப்பு, மன அழுத்தம் போன்ற உளமன நோயாளிகள் இந்த இசைமருத்துவமனைகளை நாடி நலம் பெறும் நாள் வரலாம்.

இந்த விஞ்ஞான வளர்ச்சி இசைத்துறைக்கு கிடைத்த பொக்கிஷம் ஆகும். உலகமே கர்நாடக இசையின் பெருமையை உணர்ந்து அதன் பயனை அடைவதுடன் இசை ஆர்வம் கொண்ட இளைய தலைமுறையினர் ஆய்வுகள் நடத்தி வையகமெல்லாம் கர்நாடக இசையை பரப்பி போற்ற வேண்டும். வேரை அறுத்துவிடாமல் விதம் விதமான பூக்களை கோர்த்து மகிழ்ச்சியடையுங்கள்.

– ச. தர்சன் –
மட்டம் - 4
பொறியியல் பீடம்

*With Best Compliments From*

# ராஜா Talkies

# ராஜா II Cinema

205, Kasthuriyar Road, Jaffna.
T.P : 021 2227332, 0212227334

*With Best Compliments From*

சங்கமம் இனிதே வெளிவர வாழ்த்துகின்றோம்

# Daniel Memorial Institute (DMI)





Jaffna

*With Best Compliments From*

# IYANGARAN MOTORS

## ஐங்கரன் மோட்டோர்ஸ்

Spare Parts for Motorbikes, Threewheelers, Bicycles, WaterPumps

Jaffna Road, Manipay, Jaffna

*With Best Compliments From*

N. Kugan
Proprietor

# KUGAN STUDIO

**Photographers**

**Black & White**
**Colour Processing**



Point Pedro
0212263218
0777283706

# என்றும் நட்புடன்


உன்னுடன் ஓராயிரம் கதைகள் பேசியிருப்பேன்
அவற்றில் அர்த்தமுள்ளவை எத்தனையென
இன்னும் தெரியவில்லை
உனைக்கேலி செய்து சிரித்திருப்பேன்
அவை உனைப்பாதித்ததா
என புரியவில்லை

நீ நகைப்பதற்காய் கவி பாடியிருப்பேன்
அதை ரசித்தாயோ என்னவோ
நான் அறியவில்லை
என் கவலைகளை உன்னிடம் பகிர்ந்திருப்பேன்
எனை சுமையாய் எண்ணினாயோ
அன்று நான் சிந்திக்கவில்லை

இன்முகம் காட்டும் உன்னிடம்
என் கோபம் காட்டியிருப்பேன்
அன்றென்னை வெறுத்தாயோ நண்பனே
நான் அறியவில்லை
இருப்பினும்,
என்றும் என்னுடன் நட்பு பாராட்டும்
உனைப் பிரியேன் என்று மட்டும்
நான் அறிவேன்


*– ச. வசந்த் –*
மட்டம் - 4
பொறியியல் பீடம்

*With Best Compliments From*



**அரியரட்ணம் பிறதர்ஸ்**

No. 4, Side Street, Hatton



*With Best Compliments From*

# SHANJAEYA FOOD LAND

Orders accepted for all kinds of
Shorteats, Ice cream, Soda, Sharbath,
Nelli cruch, Nes coffee





414, Hospital Road, Jaffna,
T.P : 0779285417, 0776955757

*With Best Compliments From*

மொறட்டுவ பல்கலைக்கழக
தமிழ் மாணவர்களால் வெளியிடப்படும்
சங்கமம்
மென்மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகிறோம்

# சுதர்சன்

யாழ் வீதி, மானிப்பாய்

# What is your favourite website?

What is your most wanted website when you want to download software or e-books, music, movies or games? For me, I will choose katz.cd (http://katz.cd)

In katz.cd, it has so many application, music, e-books or games that you can download directly from its server. No registration is needed. All the links will be redirected to Repidshare file server, But here you will be experiencing time delay due to limited download. Anyway you can skip this delay using this script (this method has be extracted from following this website "http://techpp.co/2009/01/24/ tiny-tip- rapidshare-hack-get-rid-waiting-time-delay/")

**Step One :**

After you have decided which file you want to download from Rapidshare, select to download it as a free user.

**Step Two :**

Now in the address bar of you browser type or copy and paste the following javascript and press 'enter'

**JavaScript: alert (c=o)**

The download counter should disappear and the link should be ready for download immediately. This works in most of the browsers on windows!

The software categorized in their particular categories for easier navigation such as application, e-books, games, TV, movies. All these files are hosted at Katz.cd is totally spyware and virus free. So you don't have to worry about being infected by a virus.

Katz.cd also keeps the old versions of the software in its server. Let say the current version of the software you installed is not compatible with your system. Just download the old version software from Katz.cd and revert back to the old version at anytime you want.

